REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 21 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022

வருட. 90 இல. 92 | Thursday 21, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-




## ரம்புக்கனை துப்பாக்கி சூட்டு சம்பவம்:

# பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்த ஜனாதிபதி, பிரதமர் உறுதி





### தத்தமது டுவிட்டரில் பதிவுகளில் இருவரும் தெரிவிப்பு

ரம்புக்கனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமது உத்தியோகபூர்வ டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

**ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் வன்முறைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் கோரிக்கை**

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் போது வன்முறையை தவிர்க்குமாறு அனைத்து பிரஜைகளிடமும்

06

---



## ரம்புக்கனை துப்பாக்கி சூட்டு சம்பவம்:

# சட்டத்திற்கு முரணாக பொலிஸார் எதனையும் மேற்கொள்ளவில்லை

### பாராளுமன்றில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து விசாரணையை செய்ய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

06

---

# இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்க உலக வங்கி தயார்

### வங்கியின் துணைத்தலைவர் டுவிட்டரில் பதிவு

THE WORLD BANK

இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. வொஷிங்டனில் நிதியமைச்சர் அலி சப்ரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உலக வங்கியின் துணைத் தலைவர் ஹார்ட்விக் ஷாஃபர் (Hartwig Schafer)

06

---



புடவைக் கைத்தொழில், உள்ளூர் உற்பத்தி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சர் எஸ்.எம்.எம் முஷர்ரப் நேற்று (20) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதில்,சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் மர்ஜான் பழீல் எம்.பி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## ரம்புக்கனை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான துப்பாக்கிச் சூடு:

# 30,000 லீற். எரிபொருள் தாங்கிக்கு தீ வைக்க முற்பட்டதால் பொலிஸார் நடவடிக்கை

### குறைந்தபட்ச பலத்தையே பிரயோகித்ததாக IGP தெரிவிப்பு



ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின்போது 30,000 லீற்றர் எரிபொருளைக் கொண்ட தாங்கி ஊர்தியொன்றுக்கு ஒரு குழுவினர் தீ வைக்க முற்பட்டதைத் தடுக்க பொலிஸார்

06

---

## ரம்புக்கனை சம்பவம்:

# பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த UNP வேண்டுகோள்

03

---

## நோன்பு நேரங்கள்

ஸஹர் முடிவு:
04.31
நோன்பு துறக்கும் நேரம்:
06.19

---

# ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு பொலிஸார் விடுத்துள்ள கோரிக்கை



எரிபொருளை கொண்டு செல்லும் பாரவூர்திகளுக்கு சேதத்தை ஏற்படுத்தவோ அல்லது இடையூறு ஏற்படுத்தவோ வேண்டாமென சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் றம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின்போது 30,000 லீட்டர் எரிபொருளைக் கொண்ட தாங்கி ஊர்தியொன்றுக்கு ஒரு குழுவினர் தீ வைக்க முற்பட்டதைத் தடுக்க

06

---




---

## ரம்புக்கனை சம்பவம்:

# USA தூதுவர் கவலை

### டுவிட்டர் பதிவில் தெரிவிப்பு



ரம்புக்கனையில் இருந்து வெளியான பயங்கரமான செய்தியைக் கேட்டு தான் கவலையடைந்ததாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

06

---

## கடனை மீளச் செலுத்தும்

# இலங்கையின் இயலுமை தொடர்பில் ஆராய வேண்டும்

### IMF தெரிவிப்பு

இலங்கைக்கு எந்தவொரு கடனையும் வழங்குவதற்கு, கடனை மீளச் செலுத்துவதற்கான உறுதிப்பாடு அவசியம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

06

---

## ரம்புக்கனை சம்பவம் தொடர்பில்

# விசாரணை நடத்த 03 விசேட குழுக்கள்

### சபையில் அமைச்சர் பிரசன்ன அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக

06

---

# முகக்கவசம் அணிவதை தொடர்வது சிறந்தது

### பொதுமக்களுக்கு GMOA அறிவுரை

நாட்டில் நிலவும் சுகாதார சீர்கேடு மற்றும் ஸ்திரமற்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு முகக்கவசம் அணியும் பழக்கத்தை தொடருமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA)

06

---




---

## முழுநாட்டு மக்கள் சார்பில்:

# ரம்புக்கனையில் ஒருவர் உயிர்த் தியாகம்



### சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் சார்பில் ரம்புக்கனையில் ஒருவர் உயிர்த் தியாகம் செய்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

06

---

# தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டுக்கு தேவையான எரிபொருள் தற்போது கையிருப்பில் உள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

எதிர்வரும் 10 நாட்களுக்கு அவசியமான பெற்றோல் கையிருப்பில் இருப்பதாகவும் அடுத்த 14 நாட்களுக்கு

06

---

## வன்முறைகளில் ஈடுபடவேண்டாம்:

# ஆர்ப்பாட்டக்காரர்களிடம் நாமல் MP கோரிக்கை



ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

நாம் எந்தப் பக்கம் இருந்தாலும், வன்முறை எதனையும்

06

---



# சர்வதேச செய்திகள்

# உக்ரைனின் கிழக்கு பகுதியில் ரஷ்யாவின் தாக்குதல் தீவிரம்

உக்ரைனின் கிழக்கில் உள்ள டொன்பாஸ் பிராந்தியம் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளது. அங்கு புதிதாக 10க்கும் மேற்பட்ட வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

உக்ரைனின் கிழக்குப் பகுதியை விடுவிக்க விரும்புவதாக, ரஷ்யா கூறி வருகிறது. பிராந்தியத்தின் சில பகுதிகள் கடந்த 8 ஆண்டுகளாக ரஷ்ய ஆதரவிலான பிரிவினைவாதிகளின் பிடியில் உள்ளன.

ரஷ்யா ஏற்கனவே கிரிமின்னா நகரத்தைக் கைப்பற்றியுள்ளது. டொன்பாஸின் இரண்டு வட்டாரங்களில் ஒன்றான லுஹான்ஸ்க்கின் முக்கிய பகுதியில் அந்த நகரம் அமைந்துள்ளது.

டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய வட்டாரங்களைக் கைப்பற்றுவதன்வழி, உக்ரைனியப் படையைச் சுற்றி வளைப்பது இலகுவாகிவிடும் என்று நம்பப்படுகிறது. தற்போது மரியுபோல் நகரின் நிலைமையும் கவலைக்குரியதாகியுள்ளது.

உக்ரைனியத் துருப்புகள் சரணடைவதற்கு ரஷ்யா மீண்டும் ஒரு நாள் காலக்கெடுவை அளித்துள்ளது.

இருப்பினும் படைவீரர்கள் ரஷ்யாவிடம் சரணடையத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். ரஷ்யப் படையினர் அங்குள்ள உருக்கு ஆலையைக் கைப்பற்றுவதைத் தவிர்க்க உக்ரைனியத் துருப்பினர் போராடி வருகின்றனர்.

ஆலையின் நிலத்தடிக் காப்பறைகளில் குறைந்தது 1,000 பேர் பதுங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

தங்களுடைய கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருப்பதாக மிரியுபோலில் இருக்கும் உக்ரைன் வீரர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். மேலும், மேற்கத்திய நாடுகள் தங்களுக்கு உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக, மரியுபோலில் சிக்கியுள்ள மக்களை மனிதாபிமான அடிப்படையில் மீட்க அனுமதிக்க வேண்டும் என ரஷ்யாவுக்கு ஐ.நா. மற்றும் உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆலைக்கு அருகில் வசிக்கும் சுமார் 120 பேர் மனிதாபிமானப் பாதைகள் வழியால் வெளியேறியுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் கூறின.

இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான போர்க் கைதிகள் பரிமாற்றத்தில் இராணுவ வீரர்கள் 60 பேரையும் பொதுமக்களில் 16 பேரையும் ரஷ்யா ஒப்படைத்ததாக உக்ரைன் கூறியது.



## உக்ரைனுக்கு கூடுதல் ஆயுதம் வழங்க பிரிட்டன், அமெ. உறுதி



அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகியவை உக்ரைனுக்கு இன்னும் கூடுதலான ஆயுதங்களை வழங்க உறுதி அளித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், கனடியப்பிரதமர்ஜஸ்டின்ட்ரூடோ ஆகியோருடன் நட்பு நாடுகளைச் சேர்ந்த ஏனைய தலைவர்களும் வீடியோ தொழில்நுட்பம் மூலம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ரஷ்யப் படையெடுப்பு புதிய கட்டத்தை அடைந்துள்ளதாக அவர்கள் கூறினர்.

கடந்த வாரம் அறிவித்தது போன்று, அமெரிக்கா உக்ரைனுக்கு மீண்டும் 800 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ நிவாரண உதவித் திட்டத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தத் திட்டம் கைகூடினால், இதுவரை உக்ரைனுக்கு அமெரிக்கா 3 பில்லியன் டொலருக்கு மேல் உதவி வழங்கியுள்ளது.

பிரிட்டன் பிரதமர் ஜோன்சன், உக்ரைனுக்குக் கூடுதல் இராணுவ ஆயுதங்கள் தேவைப்படுவதாகக் கூறினார். கனடியத் தரப்பிலிருந்து, கனரகப் போர் வாகனங்கள் அனுப்பப்படும் என்று ட்ரூடோ தெரிவித்தார்.

## சர்வதேச பொருளாதார வளர்ச்சி சரிய வாய்ப்பு



சர்வதேச நாணய நிதியம், உக்ரைன்–ரஷ்யப் போர் காரணமாக சர்வதேச பொருளாதார வளர்ச்சி முன்னுரைப்பை கீழ் நோக்கித் திருத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் சர்ச்சையின் தாக்கம் அடுத்த சில ஆண்டுகளுக்குப் பெரிய அளவில் உணரப்படும் என்று அது கூறியது.

சர்வதேச பொருளாதாரத்தின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் இந்த ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டும் 3.6 வீதமாக இருக்கும் என்று அந்த நிதியம் முன்னுரைத்துள்ளது.


இவ்வாண்டுக்காக முன்னர் வெளியிடப்பட்ட கணிப்பை விட அது 0.8 வீதம் குறைவு. 2023ஆம் ஆண்டுக்கான முன்னுரைப்பைக் காட்டிலும் அது 0.2 வீதம் குறைவு.

உக்ரேன்–ரஷ்யப் பூசலின் தாக்கம் சர்வதேச அளவில் கொள்கை மாற்றங்களுக்கும் விலை அதிகரிப்புக்கும் இட்டுச்செல்லும் என்று நிதியத்தின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வைரஸ் பரவல் சூழலால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து நாடுகள் இன்னமும் முழுமையாக மீளவில்லை.

அண்மைய போருக்கு முன்பாகவே நாடுகள் பணவீக்கத்தையும் விநியோகத் தொடர்களில் இடையூறுகளையும் சமாளிக்க வேண்டியிருந்ததை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

## சொலமன் தீவுகளுடனான சீன ஒப்பந்தத்தால் ஆஸி. கவலை



சொலமன் தீவுகளுடன் சீனா பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டதை அடுத்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா பசிபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு பற்றி கவலை வெளியிட்டுள்ளன.

இந்த வாரம் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் சொலமன் தீவுகளில் சீன கடற்படை தளம் ஒன்றை அமைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி சொலமன் தீவுகளின் மிகப்பெரிய நன்கொடை நாடான அவுஸ்திரேலியா இந்த உடன்படிக்கையை தடுக்க எடுத்த கடைசி முயற்சியும் தோல்வி அடைந்துள்ளது.

இந்த உடன்படிக்கை பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஒற்றுமையை குலைக்காது என்று சொலமன் தீவுகளின் பிரதமர் மஹசே சொகவாரே தெரிவித்துள்ளார். எனினும் இந்த உடன்படிக்கையில் உள்ள விதிமுறைகள் பற்றிய தகவல்களை அவர் வெளியிடவில்லை.

இந்த உடன்படிக்கையின் வெளிப்படைத் தன்மை பற்றி அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மரிஸ் பெயின் தெரிவித்துள்ளார்.

**சீனாவுடன் போர்**

## தவறான செய்தியால் தாய்வானில் குழப்பம்




தாய்வான் மீது சீனா தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக தவறான செய்தியை வெளியிட்டு பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியதற்காக தாய்வான் தொலைக்காட்சி நிலையம் ஒன்று மன்னிப்புக் கோட்டுள்ளது.

சீனாவின் ஆக்கிரமிப்பு பற்றிய தொடர்ச்சியான அச்சத்துக்கு மத்தியிலேயே தாய்வானில் 23 மில்லியன் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தாய்பேவை தளமாகக் கொண்ட சி.டீ.எஸ் தொலைக்காட்சி சேவை நேற்று ஒன்றுக்கு மேற்பட்ட அவசரச் செய்திகளை வெளியிட்டது. இதில் சீனாவின் ஏவுகணையால் புதிய தாய்பே நகர் தாக்கப்பட்டிருப்பதாகவும் கப்பல்கள் தாக்கப்படுவதாகவும் தாய்பே துறைமுகத்தில் இருக்கும் கப்பல்கள் சேதமடைந்திருப்பதாகவும் செய்தி வெளியிடப்பட்டது.

எனினும் புதிய தாய்பே நகரின் தீயணைப்புப் பிரிவுக்கான அனர்த்த தடுப்பு பயிற்சிகளின் உள்ளடக்கங்களை இந்த தொலைக்காட்சி சேவை தவறுதலாக புரிந்துகொண்டே இந்த செய்தியை வெளியிட்டுள்ளது பின்னர் தெரியவந்துள்ளது.

# தென் கொரியர்களின் வயதை குறைக்க புதிய அரசு திட்டம்



தென் கொரியா தனது தனித்துவமான வயதை கணக்கிடும் முறையை கைவிட்டு சர்வதேச முறைக்கு மாற திட்டமிட்டுள்ள நிலையில் அந்நாட்டு மக்கள் ஒரு வயதால் இளமை அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வரும் மே 10 ஆம் திகதி தென் கொரியாவின் அடுத்த ஜனாதிபதியாக பதவி ஏற்கவிருக்கும் யூன் சோக் லிவோல், வயதை கணக்கிடும் முறையை சரிசெய்யப்போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

தென் கொரியாவில் வயதை கணக்கிடும் முறையை நிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக, ஆட்சிமாற்றக் குழுவின் அரசியல், நீதி மற்றும் நிர்வாக உபகுழு தலைவர் லீ யொங் ஹோ தெரிவித்துள்ளார்.

மாறுபட்ட வயதை கணக்கிடும் முறைகளால் தொடர்ச்சியான குழப்பங்கள் மற்றும் தேவையற்ற சமூக மற்றும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கொரிய வயது" என்று அழைக்கப்படும் கொரியாவின் வயதை கணக்கிடும் முறையின்படி குழந்தை பிறக்கும் தினத்திலேயே அந்தக் குழந்தைக்கு ஒரு வயது என கணிக்கப்படுகிறது. தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஜனவரி முதலாம் திகதியும் மேலும் ஒரு வயது சேர்க்கப்படுகிறது.

இதன்படி டிசம்பர் 31 ஆம் திகதி பிறக்கும் குழந்தை அடுத்த தினத்திலேயே இரண்டு வயதை எட்டுகிறது.

இவ்வாறு வயதை கணக்கிடும் முறை கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் வழக்கத்தில் இருந்து வந்தபோதும் ஏனைய நாடுகள் தற்போது சர்வதேச வயதை கணக்கிடும் முறைக்கும் மாறியுள்ளன.

எனினும் இந்த வயதை கணக்கிடும் முறையை மாற்றும் முயற்சிகள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றபோதும் அவை தோல்வியிலேயே முடிந்தன.

## மன்னிப்புக் கேட்டார் ஜோன்சன்



பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், சட்டத்தை மீறியது குறித்து பாராளுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாட்டில் முடக்க நிலை நடப்பில் இருந்தபோது, தம்முடைய பிறந்த நாளையொட்டிய ஒன்றுகூடலில் அவர் கலந்துகொண்டார். அது குறித்து ஜோன்சனுக்கு இம்மாதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அவர் பாராளுமன்றத்தில் முதல்முறையாக உரையாற்றினார்.

"அது என்னுடைய தவறுதான். அதற்கு நான் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்கிறேன். தங்களுடைய பிரதமர் மீது அதிக எதிர்பார்ப்பு கொண்டிருப்பதற்குப் பிரிட்டன் மக்களுக்கு உரிமை உண்டு" என்று ஜோன்சன் கூறினார்.

முடக்கநிலையின்போது டவுனிங் ஸ்டிரீட்டில் பல்வேறு ஒன்றுகூடல்கள் நடத்தப்பட்டது குறித்து ஜோன்சனுக்குக் கூடுதல் அபராதம் விதிக்கப்படலாம்.

தாம் விதிமுறைகளை மீறவில்லை என்று கூறி அவர் பாராளுமன்றத்திடம் பொய்த் தகவல் அளித்தாரா என்பது குறித்து இன்று சிறப்பு பாராளுமன்ற விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஜோன்சன் பதவி விலக வேண்டும் என்று எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

## ஷங்ஹாய் நகரில் கொவிட் மரணம் 17ஆக அதிகரிப்பு



சீனாவின் சங்ஹாய் நகரில் கொரோனா தொற்றினால் நேற்று மேலும் ஏழு பேர் உயிரிழந்துள்ள நிலையில் அங்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

வேகமாகப் பரவும் ஒமிக்ரோன் திரிபு 25 மில்லியன் மக்கள் வாழும் சங்ஹாயில் தொற்று சம்பவங்கள் அதிகரிக்கக் காரணமாகியுள்ளது. நகரில் கடந்த சில வாரங்களாக கடும் முடக்கநிலை அமுலில் இருப்பதோடு, பல சுற்று கூட்டு சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த முடக்க நிலை அந்த நகரில் கடும் சமூக மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சங்ஹாயில் நேற்று 18,000க்கும் அதிகமான நோய்த்தொற்று சம்பவங்கள் பதிவானதோடு அதில் பெரும்பாலான சம்பவங்கள் நோய் அறிகுறியை வெளிப்படுத்தாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் தொடக்கம் சங்ஹாயில் 400,000க்கும் அதிகமான தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் கடந்த திங்கட்கிழமையே முதல் உயிரிழப்பு பதிவானது.

## மலேசியாவில் ரொஹிங்கிய அகதிகள் 500 பேர் ஓட்டம்



மலேசியாவில் தடுத்துவைக்கப்பட்ட ரொஹிங்கிய மக்களில் 500 பேருக்கு மேல் தப்பித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

பினாங்கு மாநிலத்தின் சுங்காய் பக்காப் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் குடிநுழைவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் சம்பவம் நடந்தது.

தடுத்துவைக்கப்பட்டோர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில், வளாகத்தின் கதவுகளையும் தடுப்புகளையும் உடைத்துக்கொண்டு தப்பித்ததாகக் கூறப்பட்டது.

அது குறித்து அதிகாரிகளிடம் தகவல் அளிக்கப்பட்டதை அடுத்து, தப்பித்தவர்களைத் தேடிப்பிடிக்கும் பணி தொடர்ந்தது. நேற்றுக் காலை வரை 360க்கும் அதிகமானோர் பிடிபட்டதாகக் கூறப்பட்டது. தப்பித்தவர்களில் 6 பேர் உயிரிழந்திருப்பதாக பினாங்கு பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் நெடுஞ்சாலையைக் கடக்கும் வேளையில் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

தடுப்புக்காவல் நிலையத்தில் ரொஹிங்கிய மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக நம்பப்படுகிறது. அதற்குப் பின்னர், அவர்கள் தப்பியதாக 'தி ஸ்டார்' செய்தி நிறுவனம் கூறியது.



இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக எஸ். வியாழேந்திரன், உயர் கல்வி இராஜாங்க அமைச்சராக சுரேன் ராகவன், புடவை மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சராக மொஹமட் முஷாரப், கிராமப்புற வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தமது நியமன கடிதங்களை பெற்றுக்கொண்டபோது...

### கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில்

# 2016 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவித நிதி அறிக்கையும் தயாரிக்கப்படவில்லை

## 2017, 2018, 2019 தரவுகள் அனைத்தும் அழிந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிப்பு

## கோப் குழு கூட்டத்தில் அம்பலம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் 2016 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவித நிதி அறிக்கையும் தயாரிக்கப்படாமை கோப் குழுவில் புலப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 2015 மற்றும் 2016 ஆம் நிதியாண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (கோப்) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் (19) பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்தவிடயம் புலப்பட்டது.



கணினி மென்பொருள் பிரச்சினையால் 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளுக்கான தரவுகள் அழிந்துள்ளதாக அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். இதனால் நிதிய றிக்கை தொடர்பான தகவல்கள் இல்லையென அவர்கள் குறிப்பிட்டனர்.

அதற்கமைய, இது தவறுக்காக காரணமல்ல என கோப் குழுவின் தலைவர் குறிப்பிட்டதுடன் இந்தத் தகவல்களை வேறு ஓர் இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் யார் என்பதையும் கோப் குழுவின் தலைவர் வினவினார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்தத் தகவல்கள் அழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் இங்கு சிக்கலொன்று காணப்படுவதாக நியாயமான சந்தேகம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அதனால் இது தொடர்பில் விரைவாகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறு கோப் குழு பரிந்துரை வழங்கியது.

விசேடமாக இந்த நிதி அறிக்கைகள் குறித்த தகவல்கள் குறிப்பிடப்படவில்லை என்பதால் 06




## பாழடைந்த வீடு

மறுமை நாளில் அல்லாஹ்விடம் அடியானுக்காக சிபாரிசு செய்யக்கூடியனவாக அல் குர்ஆனும் நோன்பும் விளங்குகின்றன. அது மாபெரும் பாக்கியமும் அந்தஸ்துமாகும். அந்த மறுமை நாளில் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யப்படுவது என்பது மிகுந்த பெறுமதிமிக்க மகத்துவம். அவ்வாறான மகத்துவத்தை அடைந்து கொள்வதற்கு ஏற்ப அல் குர்அனையும் நோன்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான பொறுப்பு மனிதனுக்கு முன்பாக உள்ளது.

இதை விடுத்து அல் குர்ஆனை ஏரெடுத்துப் பாராது உலக வாழ்வில் மூழ்கி இருப்பவர்களுக்காகவும் வருடா வருடம் வந்து செல்லும் நோன்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளாதவர்களுக்காகவும் அந்த மறுமை நாளில் அவை அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும் என எதிர்பார்க்கவும் முடியாது. அவ்வாறான எதிர்பார்ப்பு நியாயமானதுமல்ல.

அதன் காரணத்தினால் மறுமையில் அல் குர்ஆனும் நோன்பும் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். அதற்கு ஏற்ப வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாத விடயமாகும். அந்த வகையில் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'யாருடைய உள்ளத்தில் அல் குர்ஆனின் எதுவும் இல்லையோ அவரது உள்ளம் பாழடைந்த வீட்டுக்கு சமனாகும்' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: ஸுனனுத் திர்மிதி)

நபி (ஸல்) அவர்களின் இந்த ஒப்பீடானது அல் குர்ஆனின் எதுவும் இல்லாத உள்ளத்தின் பயங்கரமானதும் மோசமானதுமான நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதேநேரம் அல் குர்ஆனை ஓதுவதனதும் படிப்பதனதும் முக்கியத்துவம் இந்நபிமொழியின் ஊடாக எடுத்தியம்பப்படுகின்றன. தவறும் பட்சத்தில் அந்த உள்ளம் பாழடைந்த வீடாகவே இருக்கும். பாழடைந்த வீட்டின் நிலைமையை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

ஆகவே உள்ளம் ஒளி மிக்கதாக அமைந்திருக்கவென அல் குர்ஆனை ஓதுவோம், அதனைப் படிப்போம், அதனை விளங்கிட முயற்சி செய்வோம்.

மர்லின் மரிக்கார் ...

## ஸ்ரீ சத்யசாயி மகாசமாதி தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு



பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா மகாசமாதி தினம், ஏப்ரல் 24 ம் திகதி, ஞாயிற்றுக்கிழமைகாலை 5 மணிதொடக்கம் பகல் ஆராத்தியுடன் கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புட்டபர்த்தியில் பாபாவின் மகாசமாதியில் பூஜீத்த,சத்யசாயிபாபாவின் ஐம்பொன் விக்கிரகத்தின் முன்பாக, வருடா வருடம் நடைபெறும் 'மகாருத்ரா'யாகத்துடன், பரிபூரண மகா அபிஷேகம், 06

### ரம்புக்கனை சம்பவம்:

## பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த UNP வேண்டுகோள்

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. ரம்புக்கனை பிரதேசத்தில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடாத்திய தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. டுவிட்டர் பதிவொன்றின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

### பொலிஸார் காட்டுமிராண்டித்தனம்;

## ரம்புக்கன சம்பவத்திற்கு ரிஷாட் MP கண்டனம்



மக்களுக்கு சேவை செய்வதே தலையாய கடமை என்பதை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மனதில் கொள்ள வேண்டும் என தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் நேற்று முன்தினம் (19) 06

### மக்களின் கோபம் உக்கிரமடைவு:

# நெருக்கடிகளுக்கு தீர்வு காண சிந்திப்பதே அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு துப்பாக்கிச்சூடு தீர்வல்ல. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சிந்திப்பதே முக்கியமென ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ரம்புக்கனசம்பவம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரம்புக்கனயில் இடம்பெற்றுள்ள சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டை நடத்தி ஒருவரை கொலை செய்துள்ளதுடன் பலர் அதன் போது காயமடைந்துள்ளனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் சபையில் நாம் எரிபொருள் பௌஸர் எத்தனை மணிக்கு வந்தது? அதன் உரிமையாளர் யார்? இறந்தவரின் அரசியல் ரீதியான தொடர்பு என்ன? என்பன தொடர்பில் விசாரணை செய்வதோடு தற்போதைய பிரச்சினையை நிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அது தொடர்பில் கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்திற்கு சரியான பதிலை வழங்க முடியாதுள்ளனர். இத்தகைய தருணத்தில் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு எவ்வாறு தீர்வை வழங்க முடியும்.

வீடுகளில் பிள்ளைகளுக்கு உணவுகளை வழங்க முடியாது பெற்றோர் கோபத்திலும் ஆத்திரத்திலும் உள்ளனர். மக்களின் கோபம் நியாயமானதே. தற்போது எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளன. 110 ரூபாவுக்கும் குறைவாக விற்பனை செய்யப்பட்ட டீசலின் விலை இப்போது 300 ரூபாவை நெருங்கியுள்ளது. ஆனால் மக்களின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை. அதனால்தான் மக்கள் ஆத்திரமடைந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இது அரசியல் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளென கூறினாலும் 06





இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான 65ஆண்டுகால வெற்றிகரமான ராஜதந்திர உறவுளைக் குறிக்கும் வகையிலும் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனித்தா ஏ லியனகேக்கு, இன்டெர்னெஷனல் ஹியூமானிடேரியன் அகடமியின் “புவிக்கோளத்தின் சமாதானத் தூதுவர்” எனும் பிரிவிலான தங்கப்பதக்கம் கடந்த 19ஆம் திகதியன்று ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வழங்கப்பட்டது.

# ஜனாதிபதி பதவி விலகுவாரென நான் கட்சித் தலைவர்களிடம் தெரிவிக்கவில்லை

### சபாநாயகர் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதி பதவி விலகுவாரென தாம் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்ததாக சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்படும் செய்தி உண்மைக்குப் புறம்பானதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாம் அவ்வாறானதொரு கூற்றை தெரிவிக்கவில்லையென்றும் பரப்பப்படும் அத்தகைய செய்தி பொய்யானதென்றும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.

அதேவேளை கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து தீர்மானத்தை மேற்கொண்டு 113 என்ற பெரும்பான்மை பலத்தைக் காட்டினால் ஆட்சியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றே தாம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்ததாக அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.

இந்த அறிவித்தலை 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 241.11 | 252.10 |
| கனடியன் டொலர் | 260.78 | 271.52 |
| யூரோ | 357.42 | 369.33 |
| ஜப்பான் யென் | 2.5808 | 2.6855 |
| சிங்கப்பூர் டொலர் | 242.14 | 250.77 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.51 | 443.67 |
| சுவிஸ் பிராங்க் | 348.10 | 361.68 |
| அமெரிக்க டொலர் | 327.50 | 339.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 822.20 | கட்டார் ரியால் | 84.80 |
| குவைத் டினார் | 1,015.96 | சவூதி ரியால் | 82.66 |
| ஓமான் ரியால் | 805.18 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 19



**குறள் தரும் சிந்தனை**

உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு

மனத்தில் உறுதியான ஊக்கமில்லாதவர்கள் உருவத்தில் மனிதர்களாகக் காணப்பட்டாலும், மரங்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இல்லை.

## ஜனநாயக வரம்புகளை பேணி நடந்து கொள்வது அவசியம்

நாட்டில் நிலவும் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இந்நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் பல மட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது. இருந்த போதிலும் இந்நெருக்கடி இன்னும் தணிந்து கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை இன்றும் முற்றாக நீங்கவும் இல்லை.

இவ்வாறான சூழலில் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரியும், எரிபொருள் விலையேற்றத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்றுள்ளன. ஜனநாயக நாடொன்றில் குடிமக்கள் தமது கோரிக்கைகள், தேவைகளை முன்வைக்கவும் தமது ஆட்சேபனைகளையும் எதிர்ப்புக்களையும் அமைதியான முறையில் வெளிப்படுத்தவும் உரிமை பெற்றுள்ளார்கள். அந்த உரிமைகளை மக்களின் இயல்பு வாழ்வுக்கும் பொதுச்சொத்துகளுக்கும் பாதிப்புக்கள், சேதங்கள் ஏற்படாத வகையில் பயன்படுத்த வேண்டும். அதற்குரிய பூரண உரிமையைக் குடிக்கள் பெற்றுள்ளனர்.

அந்த வகையில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் முழுமையாக இடமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் எரிபொருள் விலையேற்றத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தும் நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் மக்களின் இயல்பு வாழ்வுக்கும் பொதுச் சொத்துகளுக்கும் பாதிப்புக்களையும் சேதங்களையும் ஏற்படுத்தக் கூடியனவாக விளங்குகின்றன. அதாவது ஜனநாயக வரம்புகளை மீறும் வகையில் அவை அமைந்துள்ளன.

குறிப்பாக பிரதான நெடுஞ்சாலைகளை மறித்து டயர்களை எரித்தும் பஸ், லொறி மற்றும் முச்சக்கர வண்டிகளை வீதிக்கு குறுக்காக நிறுத்தியும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் விளைவாக பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வழமை போன்று போக்குவரத்து மேற்கொள்ள முடியாத அசௌகரிய நிலைக்கு உள்ளாகினர். அநேகர் போக்குவரத்துக்காக மணித்தியாலயக் கணக்கில் வீதிகளில் காத்திருந்தனர். அதேநேரம் வீதிகளை மறித்து டயர்களைப் போட்டு எரித்ததன் விளைவாக நெடுஞ்சாலைகளிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக ரம்புக்கனையில் முன்னெடுக்கப்பட்ட ஆட்சேப ஆர்ப்பாட்டத்தில் ரம்புக்கணை ஊடான ரயில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக அப்பகுதி ஊடான ரயில் தண்டவாளப் பாதைகளில் சிலிப்பர் கட்டைகளை குறுக்காகப் போட்டு ரயில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் ஜனநாயக விழுமியங்களை மீறும் வகையில் அமைந்திருந்ததோடு, மக்களின் இயல்பு வாழ்வை பாதிக்கக் கூடியதாகவும் இருந்தது. அத்தோடு பொதுச்சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் அமைந்திருந்தன. இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கோரியும் அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் இணங்காத நிலையே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் மாலையாகும் போது பிரதேசத்தில் பதற்ற நிலைமை உருவானது.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்துள்ளனர். இருந்தும் நிலைமை கட்டுக்கடங்காத சூழலில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் கடுங்காயங்களுக்கு உள்ளாகி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்ட அவர், இக்கலவரச் சம்பவத்தில் 24 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 08 பேர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்றும் கூறியுள்ளார். இங்கு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் ஜனநாயக வரையறைகளை மீறியதன் விளைவாகவே இவ்வாறான துன்பியல் நிகழ்வு இடம்பெற்று இருக்கின்றது.

ஜனநாயக விழுமியங்களை மதித்து அதற்கு ஏற்ப ஆட்சேபனை ஆர்ப்பாட்டத்தை அமைதியாக முன்னெடுத்து இருந்தால் அது ஒருபோதும் கலவர நிலையை அடைந்திருக்காது. உயிரிழப்பும் காயங்களும் சொத்து சேதங்களும் ஏற்படவும் வழி ஏற்பட்டிருக்காது.

ஆகவே சட்டத்தைக் கையில் எடுக்காது ஜனநாயக வரையறைகளுக்கு அமைய செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டியது குடிமக்களின் பொறுப்பாகும். அமைதியான சாத்விகப் போராட்டத்துக்குப் பதிலாக பொதுச்சொத்துகளுக்கு சேதம் ஏற்படும் விதத்தில் நடந்து கொள்வது எவ்வகையிலும் நியாயமல்ல.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காக இந்தியாவைப் பாராட்டிய IMF பிரதானி

பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவினை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டாலினா ஜோர்ஜிவா பாராட்டியுள்ள அதேசமயம், சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் தொடர்ச்சியான ஈடுபாட்டினை கொண்டிருக்கும் என்றும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் உறுதியளித்துள்ளார்.

வோஷிங்டன் டிசியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இளவேனில்கால கூட்டமொன்று இடம்பெற்றிருந்த நிலையில், நிர்மலா சீதாராமனை சந்தித்தபோதே ஜோர்ஜிவா இவ்வாறு கூறியுள்ளார். தற்போதைய பூகோள அரசியல் அபிவிருத்திகள் தொடர்பாக உரையாடியிருந்த சீதாராமன் மற்றும் ஜோர்ஜிவா ஆகியோர், உலக பொருளாதாரத்தில் பூகோள அரசியல் அபிவிருத்திகளால் ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் தொடர்பாகவும் அதன் காரணமாக சக்தி துறைகளில் ஏற்பட்டிருக்கும் விலையேற்றங்களுடன் தொடர்புடைய சவால்கள் தொடர்பாகவும் கவலைகளை வெளியிட்டுள்ளனர்.



இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முதற்தடவையாக உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையுடன் மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை சந்தித்துள்ளது. அத்துடன் சடுதியாக அதிகரித்துச் செல்லும் விலைகள் மற்றும் மின்துண்டிப்பு ஆகியவை பாரியளவிலான மக்களின் இயல்பு வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்த நிலையில், இந்நிலையினை எதிர்கொள்ள அரசாங்கம் முன்னெடுத்துள்ள அணுகுமுறைக்கு எதிராகவும் பாரிய போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா தடுப்பூசித் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்தமைக்காகவும் ஜோர்ஜிவா இந்தியாவைப் பாராட்டியுள்ளார். கொவிட்19 பெருநோயினை கட்டுப்படுத்துவதற்காக நலிவடைந்த நாடுகளுக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்காகவும் அவர் இந்தியாவை பாராட்டியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்தும் உறுதியான நிலையில் இருப்பதற்கு நன்கு திட்டமிடப்பட்ட இந்தியாவின் கொள்கைகள் ஆதரவாக அமைந்திருப்பதாக ஜோர்ஜிவா சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சருக்கும் ஜோர்ஜிவாவுக்கும் இடையிலான சந்திப்பின் போது மூலதன செலவினங்கள் ஊடாக பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரவளிப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி கூறியிருந்தார்.

அதுமட்டுமல்லாமல் பெருநோய்க்கு பின்னரான பொருளாதார மீட்சிக்கு பலமான நாணயக் கொள்கைகள், கட்டமைப்பு ரீதியான பாரிய மறுசீரமைப்பு ஆகியவற்றுடன் இந்தியாவின் நிதிநிலை உறுதியான ஆதரவினை வழங்கியிருந்தது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியிருந்தார்.

கடந்த சனிக்கிழமை இந்தியாவின் கொவிட் தடுப்பூசி திட்டம் 186.49 கோடிகளை தாண்டியிருந்தது. உலக வங்கியில் நடைபெறும் இளவேனில்கால சந்திப்பு, ஜி20 நிதி அமைச்சர்களின் மாநாடு, மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பு ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக ஒன்றிய அமைச்சர் வோஷிங்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஜி20 மற்றும் நிதிசார் செயற்பாடுகளுக்கான விசேட செயலணி ஆகியவற்றுடனான உத்தியோகபூர்வமான அவரது ஈடுபாட்டுக்கு அப்பால் வோஷிங்டன் டி.சிஜ தளமாகக் கொண்டியங்கும் ஓர் ஆய்வு நிறுவனமான அட்லாண்டிக் கவுன்சிலில் திங்கட்கிழமையன்று இடம்பெற்றிருந்த நிகழ்வுகளிலும் சீதாராமன் கலந்து கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது இந்தோனேசியா, தென் கொரியா, இலங்கை மற்றும் தென் ஆபிரிக்கா உள்ளிட்ட நாடுகளுடனான இருதரப்பு சந்திப்புக்களும் இடம்பெற்றிருந்தன. மேலும், உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸுனான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றிருந்ததாக நிதி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோஷிங்டனில் சந்திப்புக்கள் நிறைவடையும் நிலையில் ஏப்ரல் 24ஆம் திகதி சான்பிரான்சிஸ்கோவுக்கு விஜயம் மேற்கொள்ளும் நிர்மலா சீதாராமன, வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுடனும் அதேபோல ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் மற்றும் மாணவர்களுடனும் சந்திப்புகளில் ஈடுபட உள்ளார். இவ்விஜயங்களை நிறைவு செய்து ஏப்ரல் 27 ஆம் திகதி அவர் இந்தியாவுக்கு பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# AIA இன்ஷூரன்ஸ் நிறுவன CEO பதவியில் முதலாவது பெண்ணாக சத்துரி முனவீர

AIA இன்ஷூரன்ஸ் தனது புதிய பிரதான நிறைவேற்று அதிகாரியாக (CEO)) சத்துரி முனவீரவை நியமித்துள்ளது. இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அமைவாக இந்த நியமனம் 01.05.2022 முதல் அமுலுக்கு வரும். நிறுவன வரலாற்றில் இவரே முதலாவது பெண் பிரதான நிறைவேற்று அதிகாரியாகயும் திகழ்வார். இலங்கையிலிருந்து தற்போது பதவி விலகவிருக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி AIA குழுமத்தினுள் இடமாற்றப்பட்டு தாய்லாந்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் நியமிக்கப்படவுள்ளார்.

இலங்கைக் காப்புறுதித் துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமாக மேலாண்மைப் பதவிகளில் மிகவும் ஆழமான அனுபவங்களை சத்துரி கொண்டிருக்கின்றார். நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதிச் செயற்பாடுகள், பெருநிறுவனச் சட்ட ஒழுங்குகள், நிறுவனச் செயலாளர் மற்றும் வெளிவிவகாரத் தொடர்புகளில் AIA இன்ஷூரன்ஸ் லங்கா (AIA ஸ்ரீலங்கா) நிறுவனத்தின் சட்டம் மற்றும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளராகத் தற்போது இவர் பதவி வகிப்பதோடு, இதற்கு முன்னர் நிறுவனத்தின் பிரதான மனிதவள அதிகாரி மற்றும் பிரதான இணக்கச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகவும் பதவி வகித்திருந்தார். மேலும் சத்துரி மேற்படி நிறுவனத்தின் மூலோபாயத் திட்டமிடல் மற்றும் வியாபாரச் சாதனைகளில் மிகவும் முக்கிய பங்கு வகிப்பதுடன் 2006 ஆம் ஆண்டிலிருந்தே நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

AIA ஸ்ரீலங்கா மிகவும் சிக்கலான பெருநிறுவன அமைப்பிலிருந்து இறுதியில் எளிய AIA குழுமத்தின் முழுமையாகச் சொந்தமாக்கப்பட்ட துணை நிறுவன மீள்கட்டமைப்புச் செயற்பாட்டிற்கு சத்துரியே தலைமை வகித்திருந்தார். AIA குழுமத்தினுள் 'மிகவும் மேம்பட்ட' நாட்டுக்கான பல விருதுகள் மூலம் 2021 இல் அடையாளப்படுத்தப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட AIA ஸ்ரீலங்காவினுடைய உண்மையான வாடிக்கையாளர் அனுபவம், வாடிக்கையாளர் மற்றும் ஆலோசகர் ஆதரவுடன் சீரமைத்தல் ஆகியவற்றின் டிஜிடல் மற்றும் செயல்முறை மாற்றத்திற்கான பொறுப்பான அதிகாரியாகவும் சத்துரி செயற்பட்டு வருகின்றார்.





கொழும்பு விஷாகா வித்தியாலயத்தில் தனது பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்த சத்துரி, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்ட இளமானி மற்றும் முதுமாணி பட்டக் கற்கைகளையும் (இலங்கைச் சட்டக் கல்லூரியில்) சட்டத்தரணிப் பயிற்சியினையும் பெற்று இலங்கையின் சட்டத்தரணி ஒருவராகவும் திகழ்கின்றார். ஐக்கிய இராச்சியத்தின் மனிதவள மற்றும் மேம்பாட்டுப் பட்டய நிறுவனத்தின் பட்டய உறுப்பினராகவும், ஐக்கிய இராச்சியத்தின் (மேன்சஷ்டர் பிஸ்னஸ் ஸ்கூல், மேன்சஷ்டர் பல்கலைக்கழகத்தில்) இணக்க சர்வதேச டிப்ளோமா (இளமானி) ICA பட்டத்தையும் சத்துரி பெற்றிருக்கின்றார்.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை தனியார் துறையில் வழிவகுக்கும் நோக்கினைக் கொண்ட IFCDFAT SheWork ஸ்ரீலங்கா கூட்டாண்மை மூலம் R+TogetherWeCan பிரசாரத்தின் ஆரம்பத்தில் இலங்கை முழுவதும் பாலினச் சமத்துவத்தினைப் பேணுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த 16 பிரபலங்களில் இவரும் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டுமிருந்தார்.

தற்போதைய பிரதான நிறைவேற்று அதிகாரிப் பதவியில் இருந்து வெளியேறும் நிகில் அத்வானி AIA இன்ஷூரன்ஸ் லங்கா நிறுவனத்துடன் 2016 இலிருந்தே அங்கம் வகிப்பதுடன், நிறுவனத்தின் புதிய ஆயுள் காப்புறுதித் திட்ட முதலீடுகள் மற்றும் சுகாதாரச் சந்தையில் AIA இன் அடிச்சுவட்டை விரிவுபடுத்துவதில் மிகவும் பொறுப்பானவராகவே செயற்பட்டிருந்தார். 2016 இல் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரியாகவும் மற்றும் வாடிக்கையாளர் மூலோபாயம் மற்றும் மாற்றத்திற்கான பணிப்பாளராகவும் பதவிகளை வகித்திருந்தார்.

குழுமத்தின் பிராந்தியப் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் AIA இன்ஷூரன்ஸ் லங்காவின் தலைவர் பில் லிஸ்லி கருத்துத் தெரிவிக்கையில், ' AIA இன்ஷூரன்ஸ் லங்காவின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக சத்துரி முனவீர நியமிக்கப்படுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் நிறுவனத்தினுடைய அடுத்த கட்ட வளர்ச்சிப் போக்கில் நிறுவனத்தினை மிகவும் நேர்மறையான வேகத்தில் அதிகரித்து சத்துரி பயணிக்கச் செய்வாரென நான் மிகவும் நம்பிக்கை தெரிவிக்கிறேன்" எனத் தெரிவித்திருந்தார்.

# டயலொக், MAS, Hemas நிறுவனங்களின் 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டம்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தினூடே அவசர நிவாரணங்களை வழங்கும் பணிகளை கூட்டாக ஆரம்பித்துள்ளன.

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில், 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டமானது அதன் நிறைவேற்று பங்காளரான சர்வோதய மற்றும் கணக்காய்வு பங்காளரான PwC Sri Lanka உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட பங்காளர்களுடன் கைகோர்த்தவாறு, டயலொக், MAS மற்றும் Hemas ஆகிய நிறுவனங்களின் நிதியுதவி பங்களிப்பில் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத்தினூடாக, 100,000 க்கும் மேற்பட்ட மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆழ்ந்த வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

மனிதநேய ஒன்றிணைவு

Dialog MAS HEMAS



25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக அவசரகால நிவாரண விநியோகம் ஆரம்பம்

## மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட 100,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சர்வோதயத்துடன் இணைந்து அவசர நிவாரணம்

நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும் வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண வேலைத்திட்டமானது 6090 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சுயாதீன தொலைக்காட்சி, சியத்த, சுவர்ணவாஹினி, டிவி தெரண மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன. மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்தின் மூலம் 25 மாவட்டங்களில் அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான

'மனிதநேய ஒன்றிணைவு' அவசரகால நிவாரண விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்த அனைத்து பெருநிறுவனங்களையும் இந்த முயற்சியுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

# வறிய முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவும் கூட்டு ஸகாத் திட்டம்

**வறிய நிலையிலுள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவுகின்ற காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் கூட்டு ஸகாத் திட்டம் வெற்றியளித்துள்ளதாக அத்திட்டத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி தெரிவித்தார்.**

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் கூட்டு ஸகாத் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் "முஸ்லிம் சமூகத்தில் ஸகாத் வழங்குவதற்கு தகுதியாக இருக்கின்ற தனவந்தர்கள் மீது கடமையாக்கப்பட்ட ஒரு கட்டயாக் கடமையே ஸகாத் வழங்குவதாகும். சமூகத்தில் காணப்படும் வறுமை நிலை போக்குவதற்காக பல்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்படுவதை பார்க்கின்றோம். அந்த அணுகுமுறைகளில் பிரதானமான ஒன்றுதான் கூட்டு ஸகாத் திட்டமாகும்" என்று குறிப்பிட்டார்.

"ஸகாத் என்பது தனிமனிதன் மீது விதியாக்கப்பட்ட சமூக ரீதியான கடமையாகும். ஸகாத் திட்டம் சமூக அமைப்பின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு அடிப்படை அம்சமாக அமைய வேண்டும் என்பது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை கவனத்திற் கொண்டு காத்தான்குடியையும் காத்தான்குடியை அண்டியுள்ள கிராமங்களிலும் இந்த ஸகாத் திட்டத்தை கூட்டாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சமூகத்தில் வறுமையாலும், மற்றும் பல நிர்க்கதி நிலைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய சிரமங்களை நீக்கி அவர்களையும் கௌரவமாக வாழ வழிவகுக்க வேண்டும் என்ற நோக்கத்திலே காத்தான்குடியில் இருக்கின்ற விதைவைகள், அநாதைகள் வேலையற்றோர், தற்காலிக வீடுகளிலே தங்கியிருப்போர் மற்றும் சொந்த வீடுகளின்றி தங்களுடைய உறவினர்களுடைய வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோரை அடையாளம் கண்டு முறையாக ஸகாத்தின் பங்கு அவர்களை சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் காத்தான்குடியில் கூட்டு ஸகாத் திட்டம் இருதசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மலசல கூடம் தேவையானோருக்கு அதனை நிர்மாணித்துக் கொடுப்பது, கடனால் கஷ்டப்படும் மக்களுடைய கடன் சுமையை குறைப்பது அல்லது இல்லாமலாக்குவது, பூர்த்தி செய்யப்படாமல் குறை நிலையில் காணப்படும் வீடுகளை பூர்த்தி செய்து கொடுப்பது, வீடில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பது, சுய தொழில் வாய்ப்புக்களை வழங்குவது, கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது, ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவது போன்ற காத்திரமான செயற்பாடுகளை இந்த கூட்டு ஸகாத் திட்டம் மூலம் முன்னெடுத்து வருகின்றோம்.

2021, 2022 ஆம் ஆண்டுகளில் இந்த கூட்டு ஸகாத் திட்டத்துக்கு மூன்று கோடி 29 இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து 680 ரூபா நிதி சேகரிக்கப்பட்டது. அந்த நிதியானது உதவித் திட்டங்களுக்கு செலவிடப்பட்டது. இந்த ஆண்டு 228 பேர் பயனடைந்துள்ளனர். சம்மேளனத்தின் கூட்டு ஸகாத் திட்டம் தொடங்கிய காலம் தொடக்கம் இன்றுவரை 6833 பேர் பயனடைந்துள்ளார்கள்.

இந்த முறையும் ஏற்கனவே செய்த செயற்பாடுகளுடன் இன்னும் சில செயற் திட்டங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. பாரிய வாகனங்களை செலுத்துவதற்கான பயிற்சிகள் உட்பட சில தொழில் பயிற்சிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வறிய முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவுகின்ற இந்த புனிதமான பணிக்கு இந்த ஆண்டும் தனவந்தர்கள் உதவ முன்வர வேண்டும்" என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## அநேகர் பயனடைந்துள்ளதாக பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் கூட்டு ஸகாத் திட்டம் தகவல்

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*



# கல்வி, சமய, சமூகப் பணியாற்றி வரும் சத்தியகீர்த்திக்கு பாண்டிருப்பில் கௌரவம்

**கல்விப் பணியை கல்முனை பிரதேசத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் திறம்பட மேற்கொண்டவர் தர்மரெட்ணம் சத்தியகீர்த்தி. கல்முனையில் 15.03.1961ஆம் ஆண்டு தர்மரெட்ணம்_ சவுந்தரம்மா தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார்.**



ஆங்கில ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 27.04.1987 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் கால்பதித்த இவர், 1990/1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராதனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரானார். ஆசிரிய சேவையை திறம்பட அர்ப்பணிப்புடன் ஆற்றிய பின்னர் அரச சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார் தர்மரெட்ணம் சத்தியகீர்த்தி.

'கீர்த்தி மாஸ்டர்' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், சேனைக்குடியிருப்பு கணேசா மகாவித்தியாலயம், பெரியநீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயம், நற்பிட்டிமுனை சிவசக்தி மகாவித்தியாலயம், பாண்டிருப்பு மகாவிஷ்ணு வித்தியாலயம் என்பவற்றில் சிறந்த ஆங்கில ஆசிரியராக பெயரெடுத்துள்ளார். சில வருடகாலம் பாண்டிருப்பு மகாவிஷ்ணு வித்தியாலயத்தில் பொறுப்பு அதிபராகப் பணியாற்றி, சமூகத்தின் நன்மதிப்பையும், கல்விப் புலத்தில் பணியாற்றுவோரின் பேரன்பை பெற்று 14.03.2021 இல் ஓய்வு பெற்றுள்ளார்.

கொவிட் 19 சூழல் காரணமாக இவருக்கான சேவை நலன் பாராட்டு விழா ஒரு வருடம் தாமதித்து வெகுசிறப்பாக இடம்பெற்றது. சர்வதேச லயன்ஸ் கழகத்தின் கல்முனை நகர லயன்ஸ் கழக செயலாளராகவிருந்து சமூகநலப் பணிகளை இவர் மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் கல்முனை முருகன் ஆலய அறங்காவல் சபையின் தலைவராகவும், போசகராகவும் இருந்து சமய சமூகப் பணியாற்றி வருகின்றார்.

தர்மரெட்ணம் சத்தியகீர்த்தியின் பணிகளைப் பாராட்டி பாண்டிருப்பு மகாவிஷ்ணு வித்தியாலயத்தில் சேவை நலன் பாராட்டும், பிரிந்தும் பிரியா நிகழ்வும் அதிபர் எஸ். அசோக்குமார் தலைமையில் இடம்பெற்றன.

**செல்லையா பேரின்பராசா...**
*(துறைநீலாவணை நிருபர்)*

# ஹோட்டல் உரிமையாளர்களுக்காக HotelsHippo.com வழங்கும் வாய்ப்பு

**முற்றிலும் இலங்கையின் உரிமையாண்மையில் இயங்கும் நிறுவனமான HotelsHippo.com தனது முதலாவது ஹோட்டல் முன்பதிவு தீர்வை அறிமுகம் செய்துள்ளது. இந்த நிகழ்வு அண்மையில் சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சுற்றுலாத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் டி.எல். சன்னசூரிய, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அதிகாரி கிமார்லி பெர்னான்டோ, பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்க மற்றும் HotelsHippo.com தவிசாளரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான கீர்த்தி பண்டார ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

2019 ஆம் ஆண்டு கீர்த்தி பண்டார ஹேரத்தின் சிந்தனை வெளிப்பாடாக இந்த ஒன்லைன் முற்பதிவு கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளாக பல்வேறு ஆய்வுகள் மற்றும் விருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு தற்போதைய நிலையை எய்தியுள்ளது.

உலகில் முதன்முறையாக, விருந்தினர்களுக்கும் ஹோட்டல்களுக்கும் நேரடியாக தொடர்பை மேற்கொள்ளக் கூடிய ஒன்லைன் முற்பதிவுக் கட்டமைப்பாக இது அமைந்துள்ளது. இதன் போது தமது விடுமுறையை அனுபவிப்பதற்காக கட்டணங்களை நேரடியாக பேசித் தீர்மானிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒன்லைன் கட்டமைப்பை Android மற்றும் iOS சாதனங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

விருந்தினர்களுக்கு தாம் தெரிவு செய்யும் ஹோட்டல்களுக்கு கோரிக்கைகளை அனுப்புவதற்கான வசதியை வழங்குவதுடன், அதனூடாக ஹோட்டல்களுக்கு விசேட விலையை வழங்கக் கூடியதாக இருக்கும். இந்த சேவையில் 24/7 அழைப்பு நிலைய சேவை மற்றும் கண்டியில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் தொழில்நுட்ப அணியும் அடங்கியுள்ளன. இலங்கையின் சுற்றுலாத் துறை வருமானத்தில் சுமார் 20 முதல் 25 சதவீதத்தை வெளிநாட்டு முற்பதிவு கட்டமைப்புகள் நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்கின்றன. 2018 ஆம் ஆண்டில், 'பொருளாதார வடிகட்டல்' எனும் கோட்பாட்டின் அடிப்படையில், நாட்டிலிருந்து சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான தொகை வெளியேறியுள்ளது என மதிப்பிடப்பட்டிருந்தது. சுற்றுலாத் துறையினால் ஏற்படுத்தப்பட்ட வருமான அனுகூலத்தை முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு இது குறைக்கப்பட வேண்டும். ஹோட்டல்கள் இந்த முகவர்களுக்கு தரகுக் கட்டணமாக 18 முதல் 28 சதவீதத்தை செலுத்துகின்றன. இதுவும் தொழிற்துறையைச் சேர்ந்தவர்களின் இலாபத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது.



இடமிருந்து வலமாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்க, சுற்றுலாத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் டி. எல். சன்னசூரிய, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அதிகாரி கிமார்லி பெர்னான்டோ, சுற்றுலாத் துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, HotelsHippo.com இன் தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான கீர்த்தி பண்டார ஹேரத் புவனக பண்டார, HotelsHippo.com பொது முகாமையாளர் அரவிந்தன் பிரபாத்சிங், வியாபார அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரி ஓஷதீ விஜேகோன்

HotelsHippo.com இனால் வங்கிக் கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் அடங்கலாக 12.5 சதவீதம் கட்டணமாக அறவிடப்படுகின்றது. சகல முற்பதிவுகளும் முழுமையான அல்லது பகுதியளவு முற்கொடுப்பனவு கட்டணங்கள் அடிப்படையில் உறுதி செய்யப்படுகின்றன. இதனால் விருந்தினர்களுக்கு ஹோட்டல்களால் சிறந்த கட்டணங்களை வழங்கக் கூடியதாக இருக்கும் என்பதுடன் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். நீண்ட கால அடிப்படையில் இந்தச் செயற்பாடானது, நாடு 'கட்டணத்துக்கான பெறுமதி' சுற்றுலாத் தலமாக திகழ உதவியாக அமைந்திருக்கும். தென்கிழக்காசிய பிராந்தியத்தில் நாம் தற்போது 6ஆம் இடத்திலேயே உள்ளோம்.

சம்பத் வங்கியுடன் HotelsHippo.com கைகோர்த்துள்ளதுடன், கொடுப்பனவுகளை சகல பிரதான வெளிநாட்டு நாணயங்களிலும், இலங்கை ரூபாயிலும் பெற்றுக் கொள்ளும். விடுமுறையை ஆரம்பத்திலிருந்து திட்டமிடுவது முதல் மீண்டும் சொந்த நாட்டுக்கு திரும்புவது வரை சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பிரயாண மற்றும் சுற்றுலா அம்சங்களைக் கொண்ட 'tourism ecosystem' கட்டமைப்பை நிறுவனம் பகுதியளவில் தயாரித்துள்ளது. நாட்டினதும், மக்களினதும் நற்பெயருக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலான சில அசாதாரண மற்றும் மோசடியான வர்த்தகர்களுக்கு எதிராக செயலாற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொண்ட வண்ணமுள்ளது.

இந்தக் கட்டமைப்பினூடாக முறைப்பாடுகளை பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும் என்பதுடன், அதனூடாக விருந்தினர்களுக்கு அவ்வாறான சம்பவங்கள் பற்றி எச்சரிக்கையூட்டக் கூடியதாக இருக்கும். தேவையெனில், சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினருடன் சட்டபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உதவியாக அமைந்திருக்கும். இவற்றுக்கு மேலதிகமாக, இந்தக் கட்டமைப்பினூடாக SOS தெரிவும் வழங்கப்பட்டுள்ளது. பிரயாணிகளுக்கு அவசர உதவியை ஒரு பொத்தானை அழுத்தி கோர முடியும். இதன் போது அழைப்பு நிலையத்தினால் நேரம் மற்றும் இடம் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினருடன் தொடர்புகளை பேணும்.

## தங்குமிடத்துக்கான முன்பதிவை மேற்கொள்வதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத்துறையில் டொலர்கள் இழக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியும்

சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்தத் திட்டத்தை பெருமளவு பாராட்டியிருந்ததுடன், அமைச்சின் முழு ஆதரவையும் இந்த இலங்கை நிறுவனத்துக்கு வழங்குவதாக உறுதியளித்தார்.

உலகளாவிய ரீதியில் 20 க்கும் அதிகமான நாடுகளில் முகவர்களைக் கொண்டுள்ள HotelsHippo.com இனால் பங்கேற்கும் ஹோட்டல்களின் பதிவுகளை ஏற்றுக் கொள்வதை ஆரம்பித்துள்ளதுடன், பிரயாணிகள் மற்றும் விடுமுறை விருந்தினர்களுக்கு விரைவில் திறக்கப்படும்.

## 'பசுமைவலு முதன்மையாளன்'

# இலங்கையின் இன்றைய நெருக்கடியை சமாளிக்க முன்னெடுக்கப்படும் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம்

**'எதிர்காலத்திற்கான வலு' என்ற கருப்பொருளில் நடைபெற்ற, பசுமைவலு முதன்மையாளன் (GEC) இன் நான்காவது சுற்று நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலு மாற்றத்திற்கு ஆதரவாக ஐந்து புதுமையான, சந்தைக்குத் தயாரான தீர்வுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது.**

'பசுமைவலு முதன்மையாளன்' என்பது பசுமை வலுப் புரட்சியை வழிநடத்தும் புத்தாக்குநர்களை ஆதரிக்கும் ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் ஜேர்மன் பெடரல் வெளியுறவு அலுவலகத்தால் நியமிக்கப்பட்டதுடன், Deutsche Gesellschaft for Internationale Zusammenarbeit (GIZ) GmbH மற்றும் இலங்கையின் சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை, இலங்கையிலுள்ள ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள் குழு ஆகியன இணைந்து செயற்படுத்தப்படுகிறது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஜேர்மனி ஃபெடரல் குடியரசின் தூதுவர் ஹொல்கர் சியூபேர்ட் "பசுமை வலு முதன்மையாளன் என்பது காலநிலை மாற்றத்தால் உலகம் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளும் ஒரு பெரிய இயக்கத்தின் ஒரு பகுதியாகும். உலக நாடுகள் தற்போது எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று உலக வலுச்சக்தி நெருக்கடியாகும். தற்போது இலங்கையிலும் மற்றும் பல நாடுகளிலும் காணக் கூடியது போல், வலுசக்திப் பற்றாக்குறையானது தேசிய பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களின் மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி மூலங்களை நோக்கி நகர்வது மற்றும் சுவட்டு எரிபொருட்களிலிருந்து விலகி இருப்பது மிகவும் அவசரமானதொரு தேவையாகி வருகிறது" என்று அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.




2021 ஆம் ஆண்டின் பசுமை வலு முதன்மையாளர்களான எகோஸ்டீம் (Ecosteem), சனோடா (Sanota), ரோடா (Rhoda), ரூட் சொனார் (Route Sonar) மற்றும் எகோ டெக் பேஸ் (Eco Tech Base) ஆகியன ஹட்ச் மற்றும் குட் லைஃப் எக்ஸ் (GLX) மூலம் செயல்படுத்தப்பட்ட பசுமை வலு முதன்மையாளன் ஊக்குவிப்பு 2021 (Green Energy Champion Accelerator 2021)' திட்டத்தின் கீழ் ஆறு மாத தீவிர பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுக்கான பிரத்தியேக அணுகுமுறையைப் பெற்றது.

பசுமைவலு முதன்மையாளன் ஊக்குவிப்பு 2021 (GEC Accelerator 2021) திட்டத்திலிருந்து பெறப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன், ஐந்து குழுக்களும் வியாபாரநாமம், சந்தைப்படுத்தல் மற்றும் தயாரிப்பு போன்ற பிரதான வணிகப் பகுதிகளில் மிகப்பெரிய வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. இந்தத் திட்டம் 6 புதிய தொழில்கள், 20 மறைமுக வேலைகளை உருவாக்க வழிவகுத்ததுடன் 52 நுண் மற்றும் சிறிய அளவிலான விற்பனையாளர்களும் இதன் மூலம் நன்மையடைந்தனர். மேலும், கையடக்க சூரிய ஒளியேற்றல் நிலையங்கள் (Ecosteem x Rhoda), பாதை மேம்படுத்துதல் (Route Sonar x Rhoda) மற்றும் சூரியஒளி சுடு நீர் அமைப்புகளுக்கு உயிர்வாயு ஒருங்கிணைப்பு (Eco Tech Base x Sanota) போன்ற வருங்கால தீர்வுகளுக்காக ஐந்து குழுக்களிலும் ஒன்றுக்கொன்று இடையிலான தயாரிப்பு ஒத்துழைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சுலக்ஷனா ஜயவர்தன "புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டிற்குள் வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். வர்த்தக சமநிலையின் அடிப்படையில் நாங்கள் நிறைய சிக்கல்களை எதிர்கொள்கிறோம், மேலும் சுவட்டு எரிபொருட்களை இறக்குமதி செய்ய நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% க்கும் அதிகமாக செலவழிக்க வேண்டும். எனவே, அந்த கவலைகளுடன், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று நான் நம்புகிறேன். 70% மட்டுமல்ல, 2030 க்குள் 100% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பங்கையும் அடைய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பசுமைவலு முதன்மையாளன் 2021 திட்டமானது எதிர்காலத்தில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்த வழிவகை செய்யும் அதேவேளை, இலங்கையில் நிலையான வலுச்சக்திக்கான சிறந்த நடைமுறை மாதிரிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் வெற்றி பெற்றுள்ளது.

பசுமை வலு முதன்மையாளன் பயணத்தின் சிறப்பம்சங்களைப் பார்வையிட www.greenenergychampion.lk எனும் இணையத்தளத்தை அணுகவும்.

## இலங்கையின்...

இலங்கைக்கு கடன் வழங்குவதற்கான மாற்றுத்திட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பு தொடர்பில் வொஷிங்டன் சென்றுள்ள தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பிலான குழுவின் தலைவர் மஷிஹிரோ நொசாகி கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அடைந்துள்ள துயரங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இதன்போது கவலை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி IGPயிடம் மனு



பொலிஸ் தலைமையகத்தில் கத்தோலிக்க குருக்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் குழுவொன்று, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சதித்திட்டம் தொடர்பான ஆதாரங்களுடன் கூடிய முறைப்பாட்டினை பொலிஸ் மா அதிபரிடம் கையளித்துள்ளது.

இலங்கையின் சாட்சியச் சட்டத்தின்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள், குறிப்பாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக அண்மையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட வழக்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை முன்வைத்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தீர்வுகளை வழங்காவிடின் நாடு கலவர பூமியாகும்

### சபையில் ரணில் MP எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் நாடு கலவரங்களை சந்திக்க நேரிடும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் ரம்புக்கனை அமைதியின்மையை அரசியலாக்க வேண்டாம் எனவும் அரசாங்கத்திடம் அவர் வலியுறுத்தினார்.

ரம்புக்கனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஆபத்தான சூழ்நிலை ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் தடுப்பதற்கு கட்சித் தலைவர்கள் இணைந்து கலந்துரையாட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## ஜனாதிபதி பதவி... (03 ஆம் பக்கத் தொடர்)

சபையில் சபாநாயகர் வெளியிட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறுக்கிட்டு சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது ஜனாதிபதி பதவி விலகுவாரென தெரிவித்ததாகவும் 113 பெரும்பான்மை என்பது தொடர்பில் அவர் அதன்போது எதனையும் குறிப்பிடவில்லையென்றும் சுட்டிக் காட்டினார்.

அதனைத் தொடர்ந்து தாம் அவ்வாறு தெரிவிக்கவில்லையென்று சபாநாயகரும் தெரிவித்தாரென்று எதிர்க்கட்சித் தலைவரும் கருத்துக்களை முன்வைத்த போது சபையில் சிறு சர்ச்சை ஏற்பட்டது.

அதனையடுத்து குறிப்பிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவும் ஜனாதிபதி பதவி விலகப்போவதாக சபாநாயகர் தெரிவித்தாரென்று எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவான கூற்றுக்களையே சபையில் முன்வைத்தார்.

எனினும் மீண்டும் மீண்டும் சபாநாயகர், கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து 113 என்ற பெரும்பான்மையை ஜனாதிபதிக்கு தெரிவித்தால் ஆட்சியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றே தாம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்ததாகவும் உறுதியாகக் கூறினார்.

## நெருக்கடிகளுக்கு தீர்வு... (03 ஆம் பக்கத் தொடர்)

அப்படியாயின் அதற்கும் அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண்டும்.

அதேவேளை கைத்தொழிலில் ஈடுபடுவோர், ஆட்டோ சாரதிகள் உள்ளிட்ட சுய தொழில் செய்பவர்களும் வேதனையிலும் கோபத்திலும் உள்ளனர்.

அவர்களின் கோபம் இவ்வாறு வெடிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கம் இத்தகைய போராட்டங்களை அரசியல் கோணத்திலேயே பார்க்கின்றது.

பிரதமர் நாட்டுக்கு உரையாற்றும் போது யுத்தத்தைப் பற்றி தெரிவிக்கின்றார். மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளாத அரசாங்கமே பிரச்சினைகளுக்கு காரணமாகின்றது. அரசாங்கத்துக்கு மக்களின் துன்பங்கள் தொடர்பில் புரிந்துகொள்ளும் உணர்வு கிடையாது. அதனால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு நிலைமை உக்கிரமடைந்துள்ளது.

இதனால் இளைஞர்கள் காலி முகத்திடலுக்கு செல்கின்றனர். ஜனாதிபதியை பதுங்குக் குழிக்குள் முடக்கி வைத்துள்ளனர். மக்களின் கோபத்தை துப்பாக்கிகள் மூலம் முடக்கலாமென்று நினைப்பது தவறு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீ சத்யசாயி... (03 ஆம் பக்கத் தொடர்)

சாயி ஆராதனா மஹோற்சவ பூஜையுடன், சாயி பஜனை மற்றும் மங்களதிரிஆராத்திசகிதம் நடைபெறவுள்ளது. நாராயணசேவையும் (அன்னதானம்) ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ சத்யசாயிஅறங்காவளர் ( ஸ்ரீ லங்கா) சபை ஆதரவில் கொழும்பு ஸ்ரீ சத்யசாயி பாபா மத்தியநிலையம்அனுசரனையுடன் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரம்புக்கன சம்பவத்திற்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

"தங்களது எதிர் காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கின்றது என்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மக்களுக்கு சேவை செய்வதே எமது கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும் " என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 2016 ஆம் ஆண்டின்... (03 ஆம் பக்கத் தொடர்)

2016ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற ஒருசில நிதி நடவடிக்கைகள் தொடர்பில் கோப் குழுவில் உரிய முறையில் கலந்துரையாட முடியாமல் போயுள்ளதாக கோப் குழுவின் தலைவர் இங்கு சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று, 2018 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 500 மில்லியன் ரூபாய் கடன் தொகை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கடனில் அதிகளவு தொகை ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை புலப்பட்டது. இதற்கு முன்னர் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனும் இந்தக் கடன் மூலம் பெறப்பட்ட நிதியால் வழங்கப்பட்டுள்ளமை இதன்போது புலப்பட்டது. ஆனால் அந்தக் கடனை 2023 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். எனினும், வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் இந்தக் கடனை 2023 ஆம் ஆண்டிலிருந்து வழங்குவதற்கு ஆரம்பிக்க வேண்டும் என்பதை அறியாமல் உள்ளதாகவும் இங்கு புலப்பட்டது.

அதேபோன்று, வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி முதல் தான் இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளதாக இங்கு புலப்பட்டது. எனினும் இது தொடர்பில் பணிப்பாளர் சபை அனுமதி மற்றும் அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்பதால் அவரது விலகல் சட்டரீதியற்றது எனவும் அதனால் ஏப்ரல் 21ஆம் திகதி அவரை கோப் குழுவுக்கு அழைப்பதற்கு பரிந்துரைப்பதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும் 2017 ஆம் ஆண்டு கட்டடம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணம் காரணமாக நிதி அறிக்கைகள் தொடர்பான ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாகவும் இங்கு புலப்பட்டது.

அதற்கமைய மூன்று மாதங்களுக்குள் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகளை மற்றும் வியாபாரத் திட்டத்தை தயாரிக்குமாறு குழுவின் தலைவர் பரிந்துரை வழங்கினார்.

இந்தக் குழு கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, மதுர விதானகே, ஜயந்த சமரவீர மற்றும் ஜகத் புஷ்பகுமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆர்ப்பாட்டக்காரர்களிடம் நாமல் MP...

தீர்க்கும் வழி அல்ல என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்! நம் நாடு கண்டது போதும்! நாம் எந்த நிலையிலும் அமைதியைப் பாதுகாக்க வேண்டும்! அதிகாரிகள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார்.

## ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு...

பொலிஸாரின் குறைந்தபட்ச பலத்தை பிரயோகிக்க வேண்டியேற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாக பொதுமக்கள் எந்தவகையிலும் எரிபொருள் கொண்டு செல்லும் பாரவூர்திகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்த...

கேட்டுக்கொள்கின்றேன் என தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பில் தாம் மிகவும் வருத்தமடைவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளின் போது வன்முறைகளில் இருந்து விலகி இருக்குமாறும் மக்களை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தனது டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ,

'ரம்புக்கனை சம்பவத்தின் பின்னர் மிகுந்த கவலைக்குள்ளாகியுள்ளேன். எப்போதும் மிகுந்த மரியாதையுடன் நாட்டுக்கு சேவையாற்றி வரும் இலங்கை பொலிஸாரினால் பாரபட்சமற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று எனக்க முழுமையான நம்பிக்கை இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களும் சம மரியாதையுடன் உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ரம்புக்கனையில் எரிபொருள் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் மட்டத்தில் விசாரணை நடத்தப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட பலர் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரம்புக்கனை சம்பவம்: USA தூதுவர்...

ஜூலி ஜியூன் சங், ட்விட்டர் பதிவொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து விதமான வன்முறைகளையும் கண்டிக்கிறேன். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், பொலிஸார் மற்றும் அனைத்து தரப்பிலிருந்தும் அமைதியைக் கோருகிறேன். முழுமையான, வெளிப்படையான விசாரணை அவசியம் மற்றும் அமைதியான போராட்டத்திற்கான மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முகக்கவசம் அணிவதை தொடர்வது...

பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் முகக்கவசம் அணிவது மற்றும் பொது இடங்களில் வளாகத்திற்குள் நுழையும் போது உடல் வெப்பநிலையை சரிபார்ப்பது ஆகியவை கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார அதிகாரிகளால் தளர்த்தப்பட்டது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் நிபுணர்கள் அடங்கிய சிறப்புக் குழு எடுத்த முடிவைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எனினும் தொற்றுநோய்களின் போது நடைமுறையில் இருந்த அடிப்படை சுகாதார நடவடிக்கைகளைத் தொடருமாறு பொதுமக்களிடம் அவர் அறிவுறுத்தியுள்ளார்

முகக்கவசம் உட்பட்ட சுகாதார நடைமுறைகள் காரணமாக சுவாச அமைப்பு தொடர்பான நோய்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருந்தாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்

இந்தநிலையில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்றாலும், போராட்டங்கள் மற்றும் பிற குழு நடவடிக்கைகளில் பங்கேற்கும்போது அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை மக்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று ஷெனால் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

## தேவையான எரிபொருள் கையிருப்பில்...

தேவையான டீசல் கையிருப்பில் இருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர், எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில்கள் மற்றும் பௌசர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ், இராணுவம் மற்றும் விமானப்படையினரின் உதவியை கோருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், மின்சார சபைக்கு தேவையான எரிபொருளும் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், விநியோக நடவடிக்கைகளின் தாமதமே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம் எனவும் குறிப்பிட்டார்.

## விசாரணை நடத்த 03 விசேட குழுக்கள்...

பாராளுமன்றத்தில் தெரிவித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகமூன்றுவிசேடகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

எரிபொருள் பௌசரை தீயிட்டுக் கொளுத்தி நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகவிருந்த பேரழிவை தடுக்கும் வகையிலேயே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, சுயாதீனமான விசாரணையை உறுதிப்படுத்தும் வகையில் மனித உரிமை ஆணைக் குழு அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் பலரும் சபையில் கருத்துக்களை முன்வைத்தனர்.

அது தொடர்பில் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் உண்மை நிலையை சபையில் தெளிவுபடுத்தும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் அரசாங்கம் மூன்று வெவ்வேறு குழுக்களை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. தேவைப்பட்டால் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மூலம் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி மூன்று உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் அவிசாவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் ஒருகுழுவும் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளைக் கொண்ட சுயாதீன விசாரணை நடத்துவதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்காக மனித உரிமை ஆணைக் குழுவிடம் விஷேட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய குழுக்களின் விசாரணைகளை ஏற்றுக்கொள்ள சில தரப்பினர் மறுக்கலாம். அதனால்தான் மனித உரிமை ஆணைக்குழுவின் சுயாதீன விசாரணை மூலம் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வது எமது நோக்கமாகும்.

அந்த அறிக்கை கிடைத்ததும் நாம் அதனை ஊடகங்கள் மூலம் வெளியிடுவோம்.

அழிவுகளிலிருந்து மக்களை பாதுகாப்பது பொலிசாரின் கடமையாகும். அந்த பொறுப்பையே ரம்புக்கனை சம்பவத்தில் பொலிசார் நிறைவேற்றியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எரி பொருள் பௌசருக்கு தீ வைத்து பேரழிவை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர். அதனைத் தடுக்கும் வகையிலேயே பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் பொலிசாரின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## இலங்கைக்கு அவசர உதவிகளை...

இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயாரென தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சியை ஆதரிப்பதற்கும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் குறித்து இதன்போது விவாதித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருட்கள், ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கு அவசர உதவியை வழங்க உலக வங்கி தயாராக உள்ளது என உலக வங்கியின் துணைத் தலைவர் ஹார்ட்விக் ஷாஃபர் தெரிவித்துள்ளார்.

## ரம்புக்கனையில் ஒருவர் உயிர்த் தியாகம்...

தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் வாழ்வதற்கான உரிமையை இல்லாமல் செய்ய வேண்டாம் எனவும் அரசாங்கம் அரச பயங்கரவாதத்தின் ஊடாக மக்களின் போராட்ட உரிமைகளை ஒடுக்குவதற்கு முயற்சிப்பதாகவும் குற்றம் சுமத்திய அவர், நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை உறுதி செய்யவே தனது உயிரை அவர் தியாகம் செய்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

இந்த கோழைத்தனமான தாக்குதலை வன்மையா கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பக்கச்சார்பின்றி தண்டிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிய அவர், ஆட்சி செய்ய முடியாவிட்டால் ஆட்சியை எங்களிடம் ஒப்படையுங்கள் எனவும் கோரினார்.

## 30,000 லீற். எரிபொருள்...

குறைந்தபட்ச பலத்தை பிரயோகிக்க வேண்டியேற்பட்டதாக பொலிஸ் மாஅதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்..

12 மணித்தியாலங்களுக்கு மேலாக அங்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு முச்சக்கரவண்டி மற்றும் எரிபொருள் தாங்கி ஊர்திக்கு தீ வைக்க முயற்சித்தனர்.

அவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்த போதிலும், அவர்கள் கட்டளைக்கு மாறாக செயற்பட்டதால் தடியடி பிரயோகம், கண்ணீர் புகைப் பிரயோகங்களை மேற்கொண்டு அடக்கும் நடவடிக்கையில் காவல்துறையினர் தொடர்ந்தும் ஈடுபட்டனர்.

அதன்போது, ஒரு குழுவினர் கலைந்து சென்ற போதிலும், மேலும் சிலர் ரயில் பாதையில் இருந்த கற்களை வீசி எரிபொருள் தாங்கி ஊர்தியை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை கடுமையாக தாக்கியதாகவும் தெரிவித்த அவர், அதன்போது, பொலிஸார் குறைந்த பட்ச பலத்தை பிரயோகித்து வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் முழங்காலுக்கு கீழே சுட உத்தரவிட்டு கூட்டத்தை கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்கும் போது காவல் துறையினர் அதிக பலத்தை பிரயோகித்தனரா? என்பது தொடர்பில் காவல்துறை தலைமையகம் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜகத் டி அல்விஸ், பொலிஸ் அதிகாரிகள், அதிகாரத்திற்கு அப்பால் செயற்பட்டார்களா என்பது தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

## சட்டத்திற்கு முரணாக பொலிஸார்...

விசாரணையை விரைந்து முடித்து அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறினார். மேலும் ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் சட்டத்திற்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார். இந்த சம்பவத்தில் அரசியல் தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படியே செயற்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களையும் பொது மக்களையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் போராட்டக்காரர்கள் பொது நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் போது தலையிடுவது பொலிஸாரின் கடமை எனவும் அவர் கூறினார்.


நேற்று சுட்டுக் கொல்லப்பட்டவரின் குடும்பத்தினருக்கு தனது இரங்கலைத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, காயமடைந்த பொதுமக்கள் மற்றும் பொலிஸாரும் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்

# அமைதியான போராட்டத்தில் வேறு குழு இணைந்த பின்னரே வன்முறை ஏற்பட்டது

அமைதியான போராட்டத்தில் வேறு ஒரு குழு இணைந்த பின்னரே வன்முறை ஏற்பட்டதாகவும் ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

எந்தக் கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும் ஒருவர் இறந்தது குறித்து கவலையடைகிறோம். முதலில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகில் அமைதியாக ஆர்ப்பாட்டம் நடந்தது. வீதியை மறித்தும் ரயில் பாதையை மறித்தும் போராட்டம் நடந்தது. ஆனால் பின்னர் வேறு குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் இணைந்ததால் தான் பிரச்சினை ஏற்பட்டது.



சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்








இது தொடர்பில் சுயாதீனமாக விசாரணை நடத்தப்பட வேண்டும். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்ற எதிரணி முயலக் கூடாது. அரசியல் இலாபம் பெற இடமளிக்கக் கூடாது. கூட்டுறவு நிறுவனத்திற்கு சொந்தமான பௌஸரில் எரிபொருள் எடுத்து வரப்படவில்லை.

**கபீர் ஹாசிம் எம்.பி (ஐ.ம.ச)**

நான்கு நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வரவில்லை. எரிபொருள் விலை அதிகரிக்க முன்னர் பெற்ற எரிபொருளை அடுத்த நாள் எடுத்து வந்ததால் இந்தப் பிரச்சினை வந்தது. பழைய விலைக்கு மக்கள் எரிபொருள் கோரினர். அது நியாயமான கோரிக்கையாகும். மக்கள் நிராயுதபாணியாக போராட்டம் நடத்தினர். பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு உணவுப்பொருட்களை லொறியில் எடுத்துச்செல்லும் நபரே கொல்லப்பட்டுள்ளார். அவர் குழப்பம் ஏற்படுத்தச் சென்றவரல்ல. சகல கட்சி ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

விசாரணை நடத்த பொலிஸாரை நியமிக்காது சி.ஐ.டிக்கு விசாரணை நடத்த பணிக்க வேண்டும். இறந்த இளைஞரின் வீட்டுக்கு இராணுவம் சென்று குடும்பத்தாரின் அனுமதியின்றி இறுதிக்கிரியையை மேற்கொள்ள முயன்றுள்ளனர்.

**ஹரீன் பெர்னாண்டோ எம்.பி (ஐ.ம.ச)**

ஐக்கிய மக்கள் சக்தியின் பெயரை அமைச்சர் பிரசன்ன பயன்படுத்தினார். ஐ.ம.ச ஆதரவாளர் தான் இறந்ததாக கூறப்பட்டது. அவரை சுட்டுக் கொல்ல அது தான் காரணமா? இதற்குப் பொறுப்பேற்று அமைச்சரும் பொலிஸ் மா அதிபரும் பதவி விலக வேண்டும்.

**நாமல் ராஜபக்ஷ எம்.பி (பொ.ஜ. பெ)**

கட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து தீர்மானிக்கலாம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து சீசீரிவி கெமராக்களை ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்கமுடியும். இந்த பிரச்சினையை மேலும் எரிய வைப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது.

**அநுர பிரியதர்சன யாப்பா எம்.பி (சுயாதீன எம்.பி)**

மத்திய வங்கி ஆளுநரின் தனி முடிவின் பிரகாரம் தான் ரூபா மிதக்க விடப்பட்டது. இதனை நிதி அமைச்சர் கூட அறிந்திருக்கவில்லை. தகுதியற்றவர்களை நியமித்ததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. அதிகாரிகள் சிலரின் தனி முடிவினால் நெருக்கடி ஏற்பட்டது. 40 எம்.பிகள் அரசிலிருந்து விலகி சுயாதீனமாக இருக்க முடிவு செய்துள்ளோம்.

ஆளும் தரப்பை விட சிறந்த குழு இந்தப் பக்கம் உள்ளனர். அமைச்சரவையை மாற்றுவதால் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது. அரசாங்கம் பதவி விலகி இடைக்கால அரசு உருவாக்க வேண்டும். முன்னாள் அமைச்சர்கள் இரண்டாம் வரிசையிலும் இராஜாங்க அமைச்சர்கள் மூன்றாம் வரிசையிலும் அமர்ந்துள்ளனர். இது எவ்வாறு நியாயமானது. நிதி அமைச்சின் செயலாளர். ஜனாதிபதியின் செயலாளர் போன்றோர் அரசாங்கத்தை கையிலெடுத்து பணியாற்றினர். இந்த அழிவுக்குக் கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும்.சர்வ கட்சி அமைச்சரவை நியமிக்க வேண்டும். எமது அரசாங்கத்துக்கு ஞானம் பிறக்க வேண்டும்.

**வீரசுமன வீரசிங்க எம்.பி (சுயாதீன எம்.பி)**

90 வீதம் இளைஞர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டது போராட்டத்தின் சாதகமான போக்கை காட்டுகிறது. 70 வருடங்களில் மாற்றமாக போக்கில் காலிமுகத்திடல் போராட்டம் நடைபெறுகிறது. வீதிக்கு நடுவில் இ.போ.ச பஸ்ஸை நிறுத்தி போராட்டம் நடத்தியதால் மாத்தறையில் குழப்ப நிலை ஏற்பட்டது. சிலரின் செயற்பாட்டால் போராட்டம் வேறு திசையில் செல்கிறது. பிரதமர் குறித்து எமக்கு கௌரவம் உள்ளது. இந்த பிரச்சினைகளுக்கு புதிய அமைச்சரவை தீர்வாக அமையாது. மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்.

**வி.ராதாகிருஷ்ணன் எம்.பி( ஐ.ம.ச)**

போராட்டத்தில் பங்கேற்றுள்ள இளைஞர்களுக்கு எமது ஒத்துழைப்பை வழங்குகிறோம். அவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அநேக பொருட்களுக்கு தட்டுப்பாடுள்ளது. தோட்ட மக்கள் கோதுமை மாவை அதிகம் பயன்படுத்துகின்றனர். 120 ரூபாவாக கோதுமை மா இருந்தபோது 80 ரூபாவுக்கு சலுகை விலையில் வழங்குவதாக அறிவித்தாலும் வழங்கவில்லை. மக்கள் வாழ முடியாத நிலையிலுள்ளனர்.

1,000 ரூபா நாளாந்த சம்பளம் கூட தோட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை. 2,000 ரூபா இருந்தாலும் வாழ முடியாத நிலை காணப்படுகிறது. ஆட்சியை எமக்கு தாருங்கள் எம்மிடம் சிறந்த நிதி அமைச்சர், சிறந்த பாதுகாப்பு அமைச்சர் போன்றோர் இருக்கிறார்கள். இந்திய உதவியுடன் தான் எரிபொருட்கள் கிடைக்கின்றன. இந்திய உதவியை மறக்க முடியாது. தோட்ட பகுதிக்கும் வடக்கு, கிழக்குக்கும் உதவுவதாக தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார். சகல மக்களுக்கும் உதவுமாறு அவரை கோருகிறோம்.

**இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய**

சிறந்த அரசியல் தலைவர்கள் கேகாலையிலிருந்து உருவாகியுள்ளனர். இந்த நிலை நீடிக்க வேண்டும்.



ரம்புக்கனை சம்பவம் வேண்டுமென்று நடந்ததாக எதிரணி தெரிவித்தது, நீண்ட நாட்களாக மக்களின் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஜே.வி.பி ஆர்ப்பாட்டம் நடத்தியது. எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. நாட்டு நிலைமை மேலும் மோசமடையலாம். அரசியல்வாதிகள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும். அமைதியான ஆர்ப்பாட்டத்தில் அடிப்படைவாத குழுக்கள் நுழைந்து வன்முறையை ஏற்படுத்துகின்றனர்.

**ஹர்ச டி சில்வா எம்.பி ( ஐ.ம.ச)**

எரிபொருள் விலையை அதிகரிக்க நிதி அமைச்சரின் அனுமதி பெறப்பட வேண்டும். பெற்றோலிய அமைச்சருக்கு தேவைப்படி விலை உயர்த்த முடியாது. நிதி அமைச்சர் நாட்டிலில்லை. பதில் நிதி அமைச்சர் ஒருவரும் கிடையாது. அவ்வாறானால் யார் விலையை அதிகரிக்க அனுமதி வழங்கினர்.

**சபை முதல்வர் தினேஷ் குணவர்தன**

பெற்றோலிய அமைச்சரின் கோரிக்கைபடி எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது. நிதி அமைச்சர் இல்லாத போது அந்த அதிகாரம் ஜனாதிபதிக்குள்ளது என்றார்.

## மதுவரி சட்டத்தின் கீழான மூன்று அறிவித்தல்களுக்கும், சுங்கச் சட்டத்தின் கீழான தீர்மானத்துக்கும் ஒப்புதல்

பாராளுமன்றம்நேற்று மு.ப 10.00 மணிக்கு கூடி சில நிமிடங்களில் இடைநிறுத்தப்பட்டு கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் உறுப்பினர்களுடனான கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

இதில் தினப்பணிகளின் கீழ் குறிப்பிட்ட வர்த்தமானிகளை விவாதத்துக்கு உட்படுத்தாது ஒப்புதல் வழங்க இணக்கம் காணப்பட்டது.

நேற்றையதினத்துக்கான வாய்மூல விடைக்கான கேள்விகள் பிறிதொரு தினத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுமென சபாநாயகர் அறிவித்தார்.

தினப்பணிகளின் கீழ், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட 2021.10.16ஆம் திகதிய 2249/50 ஆம் இலக்க, 2022.01.01ஆம் திகதிய 2260/78 ஆம் இலக்க மற்றும் 2022.01.01ஆம் திகதிய 2260/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் விவாதமின்றி சபையில் அங்கீகரிக்கப்பட்டன.

வர்த்தமானி அறிவித்தல்களைப் பார்வையிட

http://documents.gov.lk/files/egz/2021/10/224950_T.pdf

http://documents.gov.lk/files/egz/2022/1/226078_T.pdf

http://documents.gov.lk/files/egz/2022/1/226079_T.pdf

அத்துடன், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2022.01.11ஆம் திகதிய 2262/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்ட தீர்மானமும் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தல்களைப் பார்வையிட

http://documents.gov.lk/files/egz/2022/1/226214_T.pdf

பின்னர் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான விவாதத்தில் கட்சித் தலைவர்கள் உட்பட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பி.ப 4.30 மணிவரை நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார், மத்திய மாகாணத்தின் ஆசிரிய உதவியாளர்கள் நிரந்தரமாக்கப்படாமை தொடர்பில் கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஷ, கொவிட்19 சூழ்நிலையின் கீழ் முகக்கவசம் அணிவதை தளர்த்தியமை தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் வினவியிருந்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவினால் கடந்த தினமொன்றில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்றில் பெரும் எண்ணிக்கையிலான அமெரிக்க டொலர் நாணயத்தாள்கள் உகண்டா நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டமை, இதனால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம் தொடர்பில் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இன்று (21) மு.ப 10.00 மணிவரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

## சம்பந்தப்பட்ட நிறுவனங்களை கொண்டு

# கணனி கட்டமைப்பை உருவாக்க விரைவில் நடவடிக்கை எடுக்கவும்

### மதுவரித் திணைக்களத்துக்கு கோபா குழு பணிப்புரை




மதுவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் இறைவரித் திணைக்களம் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்து மதுவரி வருவாயைக் கணக்கிடும் செயல்முறையை ஒழுங்குபடுத்தும் கணினி கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) மதுவரித் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

மதுவரித் திணைக்களம் தொடர்பான 2020ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயற்திறன் குறித்து ஆராயும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) திஸ்ஸ விதாண தலைமையில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (19) கூடியபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

கணினிக் கட்டமைப்புக்கான பூர்வாங்கப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2023 ஜனவரிக்குள் இது நிறைவடையும் என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் தெரிவித்தார்.

மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து விலைமனுக்களைக் கோரி இக் கட்டமைப்பைப் பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு குழு சுட்டிக்காட்டியது. மதுவரித் திணைக்களத்தின் முயற்சிகளைப் பாராட்டிய குழு, இக் கட்டமைப்பின் ஊடாக மதுவரித் திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனாக முன்னெடுத்து வருமானத்தை அதிகரிக்க முடியும் எனத் தெரிவித்தது.

சில அரச நிறுவனங்களுக்கு கணினிக் கட்டமைப்பை உருவாக்கி அவற்றின் செயற்பாடுகளை நெறிப்படுத்துமாறு பல வருடங்களாக அறிவுறுத்தப்பட்ட போதிலும் இதுவரையில் அதற்கான சாதகமான பதில் கிடைக்காமை வருத்தமளிப்பதாகவும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்காக மதுபான போத்தல்கள் மற்றும் மதுபானம் தொடர்பான பொருட்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்டிக்கர் முகாமைத்துவ முறையை பராமரிப்பதன் முன்னேற்றம் குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

இந்த ஸ்டிக்கர் முகாமைத்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மதுவரித் திணைக்களத்தின் வருமானம் கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 17% அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளமை இங்கு தெரியவந்தது.

வருவாய் மற்றும் கணக்குப் பிரிவுகளில் மதுபான ஏற்றுமதிக்கான மதுவரி தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்தி பராமரிக்காதது உள்ளிட்ட நிர்வாகக் குறைபாடுகள் குறித்தும் குழு கவனம் செலுத்தியதுடன், அவற்றை விரைவில் சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, லசந்த அழகிய வண்ண, வைத்தியகலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, மொஹமட் முஸம்மில், வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி மற்றும் வீரசுமண வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னார் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை நிலையத்தில் குறைபாடு

## போதிய உபகரணங்கள் இன்மையால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய அவலநிலை

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் பொது வைத்தியசாலை 125 வருட பழமைவாய்ந்த வைத்தியசாலையாக காணப்படுகின்றபோதும் அதிதீவிர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கே நோயாளிகள் செல்லும் அவல நிலை காணப்படுவதாக பொறியியலாளரும் மன்னார் லயன்ஸ் கழக முக்கியஸ்தருமான லயன் எஸ். எஸ்.இராமகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சை பிரிவுக்கு மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஒன்பது வகையான சிகிச்சை உபகரணப் பொருட்கள் கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் ,

மன்னார் பொது வைத்தியசாலை சுமார் 125 வருடங்கள் மிகவும் பழமைவாய்ந்தது.

இவ்வைத்தியசாலையில் அதிதீவிர சிசிச்சை நிலையம் 2010 ஆம் ஆண்டே உருவாக்கப்பட்டது.



எனினும் இதற்கு தேவையான முழுமையான வசதிகள் இன்றியே ஆரம்பிக்கப்பட்டது. அதிகமான நோயாளிகள் இந்நிலையத்தில் சிகிச்சை பெற்று வருவதை காணமுடிந்தது.

இந்நிலையில் மன்னார் லயன்ஸ் கழகம் அதிதீவிர சிகிச்சை பிரிவின் குறைபாடுகளை இனம் கண்டு வைத்தியசாலை பணிப்பாளருடன் ஆலோசனைகளைப் பெற்று தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டது.

மன்னார் மாவட்டத்தின் சுமார் இரண்டாயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் பல கிராமங்களில் வசிக்கும் நோயாளிகளுக்கு இவ்வைத்தியசாலை மிகவும் முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

விவசாயிகளும் மீனவர்களும் நிறைந்து காணப்படும் இவ் மாவட்டமானது கடந்த யுத்தக் காலத்தில் மிகவும் பாதிப்புகளுக்கு உட்பட்ட ஒரு மாவட்டமாகவும் காணப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலையில் சரியான வளங்கள் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் மன்னாரிலிருந்து சுமார் 125 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலை இருந்து வருகின்றது.

இதனால் மன்னார் மாவட்ட நோயாளிகள் மிகவும் சிரமப்படுவதால் அதிதீவிர சிகிச்சை நிலையத்தை புனரமைக்கப்பட வேண்டும் என்ற நிலையிலேயே மன்னார் லயன்ஸ் கழகம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது.

அப்பொழுது இருந்த மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநர் ராசீக் மன்னாருக்கு வருகை தந்து இதன் நிலமையை நேரடியாக பார்வையிட்டார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொண்டு ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நிதிக்கான திட்டத்தை அதிதீவிர சிகிச்சை நிலையத்துக்காக திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை நிலையத்துக்கு ஒன்பது வகையான உபகரணங்கள் வழங்கக்கூடியதாக விருந்தது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதி திட்டத்தின் மூலம் ஒரு பாரிய திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற போது இதில் 25 வீதம் மக்களின் பங்களிப்பு அமைய வேண்டும் என்பது ஒரு நியதியாகும்.

ஆனால் 25 வீதமான நிதியை மன்னார் லயன்ஸ் கழகம் மன்னார் மாவட்டத்தில் சேகரிக்க முடியாத நிலைமை இருந்தமையால் அவுஸ்ரேலியா எஞ்சினியர் அமைப்பும் அமெரிக்காவிலுள்ள ஐ.எம்.எச்.ஓ என்ற அமைப்பும் தலா 12500 அமெரிக்கன் டொலர்களை இதற்காக எமக்கு கொடுத்து உதவினார்கள்.

இந்த வழியிலேயே மன்னார் லயன்ஸ் கழகம் மூன்றரை கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குகின்றது என அவர் தெரிவித்தார்.

# இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் தஞ்சம்



**மன்னார் குறூப் நிருபர்**

மட்டக்களப்பைச் சேர்ந்த மூவர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக நேற்று புதன்கிழமை (20) அதிகாலை சென்றடைந்துள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும் இரு சிறுவர்களும் என 3 பேர் இவ்வாறு தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

தனுஷ்கோடியை சென்றடைந்த இலங்கை தமிழர்களை மீட்ட மெரைன் பொலிஸார் மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் மட்டக்களப்பிலிருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதுக்குடியிருப்பில் கதவடைப்பு போராட்டம் தனியார் போக்குவரத்தும் பணிப்புறக்கணிப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

நாடு தழுவிய ரீதியில் விடுக்கப்பட்ட தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரும் கதவடைப்பினை மேற்கொண்டு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து சங்கத்தினரும் பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடுத்தாது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டுள்ளனர்.

# தமிழ் மக்கள் பின்வாங்கக்கூடாது

## சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல்

**ஓமந்தை விஷேட நிருபர்**



தெற்கிலுள்ளவர்கள் புரட்சிகரமான மாற்றத்தை விரும்பும் போது தமிழ் மக்கள் அதில் பின்தங்கி இருக்க கூடாது என சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்துள்ளார்.

"பொருளாதார நெருக்கடி தொடர்பாக கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாடு தற்போது கொந்தளிப்பு நிலையிலேயே காணப்படுகின்றது. பல தசாப்தங்களாக ராஜபக்ஷ என்ற பெயர் தெற்கு அரசியலில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் அரசியல் களத்தில் மிக தைரியத்துடன் பிரகாசித்து கொண்டிருந்தது.

அவர்களை வெல்ல முடியாது என்ற விம்பம் உருவாகியிருந்தது. இரண்டு தசாப்தங்களாக மிகப்பெரிய பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

எனவே இது தான் சரியான தருணம். அவர்கள் செய்த ஊழல்களை அம்பலப்படுத்தி முகத்திரையை கிழித்து அவர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும். அதனைவிட போர்க்குற்றவாளிகள் என்ற விடயமும் வெளியே வரத் தொடங்கி இருக்கின்றது.

பல்வேறு இடங்களில் இடம்பெறும் போராட்டங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டுவரப்பட வேண்டும் என்ற பதாதைகள் தற்போது சிங்கள மக்கள் ஏந்தி செல்ல கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

வடக்கு கிழக்கில் குறிப்பாக தமிழ் மக்கள் தமிழர் செறிந்து வாழும் இடங்களில் மிக குறைவாகவே காணப்படுகின்றது. தெற்கில் சட்டத்தரணிகள், வைத்தியர்கள், தொழில் சார் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்ப்பு பேரணியை நடத்தி கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி சர்வதேச விசாரணை, பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிமன்றிற்கு கொண்டு செல்லல் என்பதனை மீண்டும் நாங்கள் கொண்டு செல்லலாம்.

இச்சந்தர்ப்பத்தினை நழுவவிடக் கூடாது. தமிழ் மக்களும் இப்போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# மக்களுக்கு சேவைசெய்வதே அதிகாரிகளின் தலையாய கடமை

**மன்னார் குறூப் நிருபர்**

மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாய கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதில் கொள்ள வேண்டும் என மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

" தங்களது எதிர் காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளதென்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மக்களுக்கு சேவை செய்வதே எமது கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும்." என்று கூறினார்.

# இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா, பூட்சிற்றிக்கு முன்பாக அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்மொன்று நேற்று (20.04) மதியம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'ஊழல்கள் ஊடாக சம்பாதித்தவற்றை மக்கள் உடமையாக்கு, வங்கி வலையமைப்பை பாதுகார், அரச நிறுவனங்களின் விற்பனையை உடன் நிறுத்துக, வாழ்க்கைச் செலவை குறைத்திடு, மக்கள் கருத்துக்கு செவிசாய்த்து இயலாமையுடைய அரசே வீட்டுக்கு போ, வெளிநாட்டு கறுப்புண சந்தையை நிறுத்து' என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வங்கி ஊழியர்கள் மற்றும் புதிய மாக்சிச லெனினிச கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



யா/போக்கட்டி அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். படம்: சாவகச்சேரி விசேட நிருபர்

# வயோதிபர்களை தாக்கி கொள்ளையில் ஈடுபட்ட மூவர் கைது


தேவிபுரத்தில் வயோதிபர்களை தாக்கி கொள்ளையில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16.04.2022 அன்று புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் தனிமையில் வீட்டிலிருந்த வயோதிப தம்பதிகள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். வயோதிப பெண்ணின் கழுத்திலிருந்த மூன்று பவுண் தாலியினை கொள்ளையடித்துள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேவிபுரம் மஞ்சள் பாலத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் வயோதிப தம்பதிகள் வாழ்ந்து வந்துள்ளனர். வீடு புகுந்த கொள்ளையர்கள் அவர்களை தாக்கி விட்டு பெண்ணின் கழுத்திலிருந்த தாலியினை கொள்ளையடித்து சென்றுள்ளனர். காயமடைந்த வயோதிப தம்பதிகள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இச்சம்பவம் தொடர்பில் மோப்பநாய்களின் உதவியுடன் தடயவியல் பொலிஸார், புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கமைய திம்பிலி பகுதியினைச் சேர்ந்த மூவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

# செட்டிகுளத்தில் கதவடைப்பு போராட்டம்



**வவுனியா விசேட நிருபர்**

நாட்டில் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று (20.04) செட்டிகுளத்தில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு நாடு பூராகவும் நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்டது.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், அரசாங்கத்தை வீட்டுக்கு செல்ல வலியுறுத்தியும் நாடு முழுவதும் இடம்பெறும் போராட்டங்களுக்கு ஆதரவாக கதவடைப்பு போராட்டத்திற்கு 300 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்திருந்தன.

அந்தவகையில், அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, செட்டிகுளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடி அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் மாணவர் வரவு மிகக் குறைவாக காணப்பட்டமையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

# கிழக்கின் குரல்



## நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவோர் தமிழர் பிரச்சினைக்கு முன்வைக்கும் தீர்வு எது?

வெல்லாவெளி தினகரன் நிருபர்

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவோர் அரசியல் தீர்வு விடயமாகக் கொண்டுள்ள நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே,ஆதரிப்பதா? இல்லையா? என்ற முடிவை எடுக்க வேண்டுமென

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கண்ணகி அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள அவரின் காரியாலயத்தில் (19) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இதுபற்றி அவர் கூறியதாவது,



வடக்கு, கிழக்கில் மக்களின் இருப்புக்காக நாங்கள் போராட வேண்டிய தேவைகள் நிறைய உள்ளன.

யுத்தத்திற்கு செலவு செய்த பில்லியன் கணக்கான டொலர்கள் போல் எதிர்காலத்தில் செலவழிக்க முடியாது. இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கவேண்டும். இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருபவர்களுக்குள் என்ன விதமான ஒற்றுமை இருக்கின்றது. இத்தீர்மானம் வெற்றி பெறும் பட்சத்தில் ஏற்படப்போகும் அரசியல் மாற்றத்தில் புதிதாக உருவாகும் அரசு எமது மக்களுடைய அரசில் தீர்வு விடயமாக என்ன நிலைப்பாட்டை எடுக்கும்.

இவற்றை அறிந்து கொண்டுதான் இது விடயமாக முடிவெடுக்கவேண்டும். இன்று போராடும் சிங்கள மக்கள், எமது இனப்பிரச்சனை தொடர்பான எந்த எண்ணப்பாடும் இல்லாதுள்ளனர்.இந்த போராட்டத்தில் பங்குபற்றுவதனால் தமிழர்களுக்கு என்ன இலாபம்? என்பதை உறுதிபட தெரிந்து கொண்டுதான் பணியாற்ற வேண்டும் என்றார்.

## இராஜாங்க அமைச்சர் முஷாரப் கடமைகளை பொறுப்பேற்பு

அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்



புடவைக் கைத்தொழில் மற்றும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் எஸ்.எம்.எம். முஷாரப் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று(20) பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பழில், அலி சப்ரி றஹீம், அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சோதனைகளுக்குள்ளாகும் போது இறை நெருக்கத்தை அதிகப்படுத்த வேண்டும்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

**அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் (ரஷாதி)**

முஸ்லிம்கள் நெருக்கடிகள், சோதனைகள், துன்ப துயரங்களுக்குள்ளாகும் போது இறை நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு சிறந்த முன்னுதாரணமாக இஸ்லாமிய வரலாற்றில், ஹிஜ்ரி 02 ம் ஆண்டு இடம்பெற்ற பத்ர் யுத்த களம் விளங்குவதாக அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக்

இஸ்லாமியக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் (ரஷாதி) தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மர்கஸ் பள்ளிவாசலில் நடைபெற்ற பத்ர் யுத்த நினைவு நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

புனித அல்குர்ஆனை ரமழான் மாத்தில் இறக்கிவைத்த இறைவன், புனித றமழான் மாதம் 17ம் தினத்தில் பத்ர் யுத்தத்தையும் இடம்பெறச் செய்து,முஸ்லிம்களுக்கு மகத்தான பாரிய வெற்றியை கொடுத்தான். இஸ்லாமிய வரலாற்றில் பத்ர் யுத்தம் முக்கிய மைல்கல்லாகும்.

இதனை முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மிகவும் பலம்வாய்ந்த எதிரிகளை, குறைந்த பலங்கொண்ட, களச்சூழலில் பத்ர் யுத்தத்தில் எதிர் கொண்ட முஸ்லிம்களுக்கு அல்லாஹ் மகத்தான வெற்றியைக் கொடுத்தான். இதற்கு முஸ்லிம்கள் இறைவன் மீது கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையே பிரதான காரணமாகும்.

இவ்வாறான நம்பிக்கையே எங்களது உள்ளங்களிலும் ஏற்பட வேண்டும். பல்வேறு தனித்துவம், சிறப்புக்களுடன் முஸ்லிம்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ள புனித ரமழான் மாதத்தின் பெரும்பகுதியை நாங்கள் கடந்து விட்டோம். ரமழான் வாழ்வில் எவ்வாறான மாற்றம், தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே முக்கியமாகும்.

ஈமானின் அதிகரிப்பு, உள்ளச்சம், நல்லமல்கள் என்பனவற்றின் மூலம் எம்மை புடம்போடப்படல், மனிதப் புனிதனாக மாறல் மற்றும் இறைநெருக்கத்தை அதிகப்படுத்துவதனூடாகவே உயர்ந்த சுவனத்தை அடைந்து கொள்ள முடியும். இதற்கான சந்தர்ப்பமாக புனித ரமழான் தரப்பட்டுள்ளது. இதனை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் ஆபத்து

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. ஏப்ரல் (09) முதல் (15) வரையான காலப்பகுதியில் 36 பேர் டெங்குநோய்க்கு ஆளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 நோயாளர்களும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நோயாளர்களும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 நோயாளர்களும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 நோயாளர்களும், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 நோயாளர்களும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 நோயாளர்களும், வாழைச்சேனை, ஒட்டமாவடி, வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளர்களுமாக மொத்தம் 36 பேருக்கு இந்த நோய் தொற்றியுள்ளது. இருப்பினும் காத்தான்குடி, பட்டிப்பளை, வவுனதீவு, வாகரை, ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட்டு, வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காதவகையில் சூழலை துப்புரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## புதிய உறுப்பினராக றமிஸ் நியமனம்

காரைதீவு குறூப் நிருபர்

சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீ.ல.சு.கட்சியின் புதிய உறுப்பினராக அப்துல் ஹமீட் அன்வர் (றமிஸ்) நியமிக்கப்பட்டுள்ளார். இவர்,ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளரும், சம்மாந்துறை பிரதேசத்தின் பிரபல வர்த்தகருமாவார். ஏற்கனவே பதவிவகித்த வை.பி.எம். முஸம்மில் உறுப்பினர் பதவியிலிருந்து கட்சியால் நீக்கப்பட்டதை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று கட்சி தலைமையகத்தில் வைத்து வழங்கினார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளருமான ஏ.அச்சிமொகமட், சபையின் முன்னாள் உப தவிசாளரும், கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான வெ.ஜெயச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வவுணதீவு கோப் நிலையத்தில் தீ ரூபா இருபது இலட்சம் நஷ்டம்




புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுணதீவில், திறந்துவைக்கப்பட்ட கோப் விற்பனை நிலையத்தில் தீ ஏற்பட்டதில் பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகின.வவுணதீவு பொலிஸாரும் மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.

கடந்த (18) திங்கட்கிழமை இங்கு தீ, ஏற்பட்டது. விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலானதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதில்,சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தீ ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் முழு விசாரணை நடத்தப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

## மஸ்ஜித்களில் கடமையாற்றுவோருக்கு ரமழான் மாத பொதிகள் வழங்கி வைப்பு

புதிய காத்தான்குடி விஷேட நிருபர்



ரமழான் மாத நோன்பை முன்னிட்டு, காத்தான்குடி நகரம் மற்றும் அயல் கிராமங்களில் உள்ள பள்ளிகளில் கடமையாற்றும் கதீப்மார், இமாம்கள் முஅத்தின்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

சமூக மேம்பாட்டிற்கு உழைக்கும் இவர்களின் நலன் கருதி, காத்தான்குடி கதீப்மார் இமாம்கள் சம்மேளனம் அதன் வேலைத்திட்டத்தின் கீழ் தனவந்தர்களின் உதவியுடன் இவற்றை வழங்கியது.

கதீப்மார், இமாம்கள், முஅத்தின்களின் கண்ணியம் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில், காத்தான்குடி கதீப்மார் இமாம்கள் சம்மேளனம் இத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. மஸ்ஜித்களில் கடமையாற்றும் 225 அங்கத்தவர்களுக்கு வருடாந்தம் இவ்வாறான பொதிகள் வழங்கப்படுவதாக இவ்வமைப்பின் பொதுச் செயலாளர் மௌலவி எஸ்எம்எம் முஸ்தபா லாஹி தெரிவித்தார்.

குறைந்த வேதனத்தில் முழுநேரம் இறைபணியாற்றும் இவர்கள், இன்றைய காலகட்டத்தில் பொருளாதார விலைவாசி ஏற்றம் காரணமாக மிகவும் கஷ்டப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மூதூர் பிரதேச விதவைகளுக்கு ரமழான் கால கொடுப்பனவுகள்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேசத்தில் மிக வறுமை நிலையில் வாழும் மக்கள் மற்றும் விதவைகளக்கு,பணம் மற்றும் பொருள் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூதூர் அனர்த்த நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜே.ஜே.பவுண்டேசன் ஸ்தாபகர் ஏ.ஹனீப் ஹாஜியாரின் நன்கொடையாக இவை வழங்கப்பட்டன.

மூதூர் அனர்த்த நலன்புரிச் சங்கத்தின் தலைவரும், மூதூர் முஸ்லிம் விவாக பதிவாளருமான எம்.வை.லாபீரின் வேண்டுகோளின் பேரில், ஞாயிற்றுக்கிழமை (17) மூதூர் அனர்த்த நலன்புரிச் சங்க பெரியபால காரியாலயத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

பல்வேறு கிராமங்களையும் உள்ளடக்கிய இக் குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகமட் கனி, மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரளவின் மூதூர் பிரதேச இணைப்பாளர் எம்.எஸ்.முபாரக், கதீப்மார் சம்மேளன தலைவர் எம்.நிஸார் மௌலவி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு

பாலமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட சமாதான நீதவான் சங்கம், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்துடன் இணைந்து நடாத்தும் இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெறவுள்ளது.

சமாதான நீதவான் சங்கத்தின் தலைவரும் முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளருமான யூ.எல்.எம். ஹாசிம், சாரணர் சங்கத்தினுடைய தலைவரும் பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனிபா ஆகியோர்களது தலைமையில் இந்த இப்தார் நிகழ்வு நடைபெறும்.

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் அமைந்துள்ள"கிங் ஏசியா"ஹோட்டலில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வியலாளர்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், சமாதான நீதவான் சங்கம் மற்றும் சாரணர் சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவின் தலைவரும் உதவி மாவட்ட ஆணையாளருமான எம்.எப்.றிபாஸ் தெரிவித்தார்

## அங்கவீனமுற்ற குடும்பத்திற்கு வீடமைப்பு உதவி

பெரியநீலாவணை விஷேட நிருபர்



சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக அங்கவீனமுற்ற குடும்பத்திற்கு வீடமைப்பு உதவியை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், நிந்தவூர் பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கான காசோலையை நிந்தவூர் பிரதேச உதவி பிரதேச செயலாளர் ரி.ஜெஸான் வழங்கி வைத்தார். காசோலையை வழங்கி வைக்கும் நிகழ்வில், பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் எம்.ரி.எம். நயீம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம் .ஐ எம்.முர்ஷித் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

## ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க கர்ப்பிணித்தாய்மார்களின் அர்ப்பணிப்பு அவசியம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசங்களில் காணப்படும் குழந்தைகளின் போசாக்கு மட்டக் குறைவை போக்குவதற்கு ஆரோக்கியமான சமூகமாக மாறவேண்டும் என்றும்,இதனூடாகவே பொருளாதார ரீதியிலும் முன்னேற முடியுமென்றும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சைக்காக சமூகமளித்திருந்த தாய்மார் மத்தியில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



இங்கு வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றினால் சுகமான ஒரு சமுதாயமாக மலர முடியும்.அந்த சுகமான சமூகம் மலரும் போதே நாங்கள் பொருளாதார ரீதியல் முன்னேறலாம். பிறக்கும் குழந்தை புத்தி கூர்மையாக இருக்கும் போதே நமது சமூகம் வளர்ச்சியடையும். எமது பிரதேசத்தில் அண்மைக்காலமாக சில நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளன. அதனை தடுப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். ஆரோக்கியமாக இருந்தாலே, குழந்தை புத்தி கூர்மையுள்ளதாக இருக்கும். இதற்கு தாய் சேய் நலன் மிகவும் முக்கியமானது.கர்ப்பகாலத்தில் தாயும் சேயும் போசாக்கானவர்களாக இருக்க வேண்டும்.

அத்தோடு சுகாதாரமான வாழ்க்கை முறை, வாழும் சூழல், பிரசவம், பிரசவத்திற்கு பின்னரான தேகாரோக்கியம், என்பவற்றிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். சாய்ந்தமருது பிரதேசத்தில் போசாக்கு மட்டம் குறைந்த எத்தனையோ தாய்மார் உள்ளனர்.

குறிப்பாக இந்த விடயத்தில் கர்ப்பிணித்தாய்மார் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் என்றார்.

# நகர்வலம்



## நெருக்கடி சூழலில் நிதானம், புத்தியுடன் நடந்து கொள்ள முஸ்லிம்களுக்கு தேசிய ஷூரா சபை ஆலோசனை

நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார நெருக்கடிமிக்க சூழலில் முஸ்லிம்கள் நிதானமாகவும், புத்திசாதுர்யத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென தேசிய ஷூரா சபை வலியுறுத்தியுள்ளது.

தேசிய ஷூரா சபை அண்மையில் நடத்திய ஆலோசனை மன்றக் கூட்டத்தில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடத்திய ஆலோசனை மன்றத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக தேசிய ஷூரா சபை விசேட ஆலோசனை மன்றம் ஒன்றை கொழும்பில் நடாத்தியது.

தேசிய ஷூரா சபையின் தலைவர் சட்டத்தரணி ரீ.கே.அஸூர் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில், பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலையேற்றம், அரசியல் கொந்தளிப்பு, இவற்றின் விளைவாக மக்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியான சூழ்நிலை, இவற்றிலிருந்து நாட்டுமக்கள் வெளியேறுவதற்கான உபாயங்கள் போன்றன பற்றி துறைசார் நிபுணர்கள் கருத்துக்களை பரிமாறினர். உலமாக்கள், புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இயக்கங்களின் பிரதிநிதிகள், தேசிய ஷூரா சபையின் அங்கத்துவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினர்.

ஷூரா சபையின் உபதலைவர்களில் ஒருவரான அஷ்ஷேக் எஸ். எச். எம். பளீல், நாட்டின் இன்றைய நிலவரம்,அமர்வு கூட்டப்பட்ட நோக்கம் பற்றி விளக்கினார். மற்றொரு உபதலைவர் சட்டத்தரணி ஜாவித் யூசுப், நாட்டின் அரசியல் நிலைமையை விளக்கியதோடு மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புகளை எடுத்துக் கூறினார்.

இன்னுமொரு உபதலைவர் ரீஸா யஹ்யா, மக்களும், நாடும் இன்று எதிர் நோக்கியுள்ள பொருளாதார பிரச்சனைகளையும் அதற்கான பரிகாரங்களையும் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம் எம் சுஹைர் இன்றைய அரசியல் நெருக்கடிக்கான அடிப்படை காரணங்களை விளக்கி உரை நிகழ்த்தியதுடன், சட்டத்தரணி மாஸ் யூசுப் அரசின் பொறுப்புக்கள், சீரான அரச நிருவாகம் பற்றி எடுத்துக் கூறினார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்,முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம் அமீன், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் செயலாளர் சட்டத்தரணி பாரிஸ் சாலி, டாக்டர் யூசுப், எம். அஜிவதீன், எச்.எம் ரிலா, இஸ்மாயில் அஸீஸ், டாக்டர் திருமதி நியாஸ், தஸ்லிம் மௌலவி, ஷூரா சபையின் பொருளாளர் சியாத் இப்ராஹீம் மௌலவி ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர்.

தேசிய ஷூரா சபையின் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் நன்றியுரை வழங்கினார்.

## விஞ்ஞான பாடக் கருத்தரங்கு

(புத்தளம் தினகரன் நிருபர்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச விஞ்ஞான பாட கருத்தரங்கொன்று ஏற்பாடாகியுள்ளது.

புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் வழிகாட்டலில் தேர்ச்சி பெற்ற வளவாளர்களின் பங்களிப்புடன் இக்கருத் தரங்கு நடத்தப்படவுள்ளது.இவ்வருடம் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இதில் பங்கேற்று பயனடைய முடியும்.

நகரசபையால், நடாத்தப்படவுள்ள இந்த விஞ்ஞான பாட இலவச கருத்தரங்கு இம்மாதம் (23) சனிக்கிழமை காலை எட்டு மணி முதல் மாலை 4.30 வரை புத்தளம் கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக அமைந்துள்ள மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்ற புதிய ஜமாத்தார்களுக்கான "நஸிய்யத்" நிகழ்வில்,கலீபதுஷ் ஷாதுலி முஹம்மத் ஸுஹ்ர் (பாரி)பிரதம அதிதியாக கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக பாலஸ்தீன் முன்னாள் தூதுவரும் கொழும்பு உம்மு ஸவாயாவின் நிர்வாக சபை சமய விவகார குழு தலைவருமான பவுசான் அன்வர் பங்கேற்ளார். தொட்டவத்தை பள்ளிவாசல்களின் புதிய தர்ம கர்த்தா எம்.எச்.எம். ரிஸ்வான் ஹாஜி மற்றும் தொழிலதிபர் மில்பர் மக்கீன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்:பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

## டிப்ளோமா தொழிற்பயிற்சி மாணவர்களின் ஏற்பாட்டில் கண்காட்சி நிகழ்வுகள்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் நகரசபை, நெனசல ஆஸி கிளப்பின் ஸ்டார் அகடமியுடன் இணைந்து நடாத்தும் ஸ்கிரீன் பிரிண்டிங் டிப்ளோமா தொழிற்பயிற்சி கற்கை நெறி மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த கண்காட்சி நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது, ஒருங்கிணைந்த நிகழ்வாக நகரசபையின் சிரேஷ்ட சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ஜிப்ரியினால் மாணவர்களுக்கான செயலமர்வு நடத்தப்பட்டது.

இதன்போது, தற்காலத்தில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கும் திண்மக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கான தீர்வு எனும் தொனிப்பொருளில் அவர் விளக்கமளித்தார்.

இதற்கு மாணவர்களின் பங்களிப்பு பற்றியும் விபரித்ததோடு, விரைவில் நகர சபையினால் குப்பை கூளங்களை பிரித்தெடுக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் நகரபிதா உரையாற்றுகையில்,

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில், இவ்வாறான பயன்மிகு தொழிற்கல்வி கற்கைநெறிகள் தொடர்ந்தும் நகர சபையால் முன்னெடுக்கப்படும்.

மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சிகள் அவர்களது படைப்பாற்றலை பிரதிபலிக்கிறது. குறுகிய காலக்கற்கை நெறிகளுக்கு வளவாளர்களாகப் பங்கேற்ற ரிஸ்வான் உட்பட பலரது சேவைகளையும் அவர் பாராட்டினார்.

இதனைத் தொடர்ந்து இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சி பொறுப்பாளர் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன் மற்றும் சக நகரசபை உறுப்பினர்களான ஜௌபர் மரைக்கார், பர்வின் ராஜா, ஆரிப் சிஹான் மற்றும் நகரசபை உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து, புத்தளம் நகர சபைக்கு எல் ஈ டி தெருவிளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இந்த விளக்குகளை, நகர சபை உறுப்பினர் திரு.நகுலன், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜௌசி ஜமால்தீன், மக்கள் தொடர்பதிகாரி எம்.முறாத் ஆகியோர் நகர சபைத் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக்கிடம் ஒப்படைப்பதை படத்தில் காணலாம்.

(படம் : புத்தளம் தினகரன் நிருபர் )

## மாப்புல்லாவெவ பிரதேசத்தின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி

( திறப்பனை தினகரன் நிருபர்)

பொலன்னறுவை மின்னேரியா பகுதி கல்ஓய மாப்புல்லாவெவ பிரதேசத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.பொலன்னறுவை மாவட்ட விவசாய வலயத்திலுள்ள விவசாய கழகங்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இங்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பலவற்றை மேற் கொண்டுள்ளதாக பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரசிரி அத்துகோரல தெரிவித்துள்ளார்.விவசாய மக்களின் தானிய வகைகளை சரியான முறையில் உலர வைப்பதற்கான வாய்ப்பை பெற்றுக் கொடுக்க தேவையான மேடை வசதிகளையும் ( களம் ) அமைத்துக் கொடுக்கவும் இதன் கீழ் திட்டமிடப்பட்டுள்ளன. குறித்த வேலை திட்டத்திற்காக 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

## உலக ஆன்மீக தலைவருக்கு கத்தமுல் குர்ஆன் பாராயணம்

### இன்று மாலை அஸர் தொழுகையின் பின்னர் ஆரம்பம்

(பேருவளை பி.எம். முக்தார்)

இறையடி சேர்ந்த ஷாதுலியா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர், மர்ஹூம் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஜி அல் மக்கி அஷ் ஷாதுலி (ஷேய்ஹூஸ் ஸஜ்ஜாதா ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்களின் பெயரிலான, கத்தமுல் குர்ஆன் தமாம் வைபவமும் புனித ரமலான் மாத விஷேட ஸலவாத் மஜ்லிஸும் இன்று (21) வியாழக்கிழமை மாலை அஸர் தொழுகையை தொடர்ந்து பேருவளை பெலஸ்பாத் ஷாதுலியா ஸாவியாவில் நடைபெறும்.

சீனங்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக்( பஹ்ஜி) தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸிற்கான ஏற்பாடுகளை, ஸாவியா நிர்வாக சபை தலைவர் அல் ஹாஜ் இக்பால் ஸம்ஸுதீன்(ஜே.பி) தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்கள் ஏற்பாடு செய்கின்றனர்



அஸர் தொழுகையை தொடர்ந்து புனித அல்குர்ஆன் (கத்தமுல் குர்ஆன்) மஜ்லிஸ் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து ஸலாத்துன் நாரியா,ஹலரா(திக்ர்) மஜ்லிஸும் இறுதியாக துஆ பிரார்த்தனையும் இடம்பெறும். இறையடி சேர்ந்த சங்கைக்குரிய ஷேய்ஹு நாயகம் அவர்களின் ஆன்மீக, சமய பணிகள் தொடர்பான உரைகளும் இடம் பெறுமென ஜாலியா நிர்வாக சபை தலைவர் இக்பால் ஸம்ஸுதீன் தெரிவித்தார்

கொழும்பு உம்மு ஜாலியா நிர்வாக சபை தலைவர் தேசபந்து அல் ஹாஜ் மக்கி ஹாஷிம் நிர்வாக சபை சமய விவகார குழு தலைவரும் பலஸ்தீன நாட்டுக்கான முன்னாள் இலங்கை தூதுவருமான அல் ஹாஜ் பௌஸான் அன்வர் ஆகியோரின் வழிகாட்டலுக்கமைய

இந்த நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள தோப்புவ சந்தியை மறித்து கனரக வாகன சாரதிகள் (19) ஆர்ப்பாட்டம் நடத்தினர். வீதிக்கு குறுக்காக வாகனங்களை மறித்து தடையை இவர்கள் ஏற்படுத்தியதால், கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் நீர்கொழும்பு பகுதிகளிலிருந்து வருகை தரும் வாகனங்கள்பயணிக்க முடியாமல் தடைப்பட்டன. இதனால், சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு பயணிக்கும் வாகனங்களும், குருநாகல் பிரதேசத்துக்குச் செல்லும் வாகனங்களும் குறித்த நகர முடியாமல் திணறின. தோப்புவ சந்தியில் கொச்சிக்கடை மற்றும் வென்னப்புவ பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர். (படம், நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

## மகளிர் விடுதியில் கசிப்பு வடிப்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

(நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

மினுவங்கொட, ஆண்டியம்பல பிரதேசத்திலுள்ள மகளிர் விடுதியொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் கள்ளச் சாராயம் வடித்த 41 வயதுடைய நபரொருவரை கட்டுநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து கட்டுநாயக்க பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த விடுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதிலிருந்து கசிப்பு, கசிப்பு கோடா இரும்புக் கம்பி வளையல்கள், இறப்பர் பட்டிகள், பிளாஸ்டிக் பெரல்கள் உட்பட பித்தளை கம்பிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நுவன் தாரக்க தலைமையில் இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக நீதி மன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்பொலிஸார்நடவடிக்கை எடுத்துள்ளனர் .



கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் விழா நேற்று முன்தினம் (19) கல்லூரி வளாகத்தில் சமயக் கிரியைகளுடன் நடைபெற்றது. பாடசாலை பிரதி அதிபர் திருமதி இ. விஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிலியந்தலை கல்வி வலய தமிழ்ப் பிரிவின் உதவி கல்விப் பணிப்பாளர் கே.எஸ்.முருகானந்தன் வலய சார்பாகக் கலந்து சிறப்பித்தார். புதிய மாணவர்கள் மலர்ச் செண்டு வழங்கி வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## ஒன்றாக மது அருந்திய குழு கைகலப்பு, ஒருவர் படுகாயம்

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில், படுகாயமடைந்த நபர்,அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில்

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். ஹிதோகம பொலிஸார் இதுபற்றித் தெரிவித்தனர்.

ஹிதோகம பொலிஸ் பிரிவிலுள்ள கழுவில பகுதியில் இச்சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர் 43 வயதுடைய ஹிதோகம கழுவில பகுதியை வசிப்பிடமாக கொண்டவராவார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. சம்பவதினத்தன்று சிலர் ஒன்றாகக் கூடி மது அருந்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட வாய் தர்கத்தில், இவர்கள் இரு குழுக்களாக பிரிந்ததில் கைகலப்பு ஏற்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிதோகம பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



கொட்டிகஹவத்தை கேம்பல் சர்வதேச பாடசாலையின் வருடாந்த சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வைப்பவம் அண்மையில், பாடசாலை வளாகத்தில் அதிபர் திருமதி ஷர்மைன் பிரேமலால் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளதை படங்களில் காணலாம்.

(படம் : ரூஸைக் பாரூக்)







இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக செந்தில் தொண்டமான் சௌமிய பவனில் தமது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.



சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழா நவசக்தி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் டயகம சௌமியமூர்த்தி தொண்டமான் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது

# மலையகத்தில் போராட்டங்கள் முன்னெடுப்பு போக்குவரத்து ஸ்தம்பிதம், மக்கள் அவதி

**ஹற்றன் சுழற்சி, கினிகத்தேனை தினகரன், ஹற்றன் விசேட, பதுளை தினகரன், மஸ்கெலிய தினகரன் நிருபர்கள்**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளவியரீதியில் பல்வேறு விதமான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் நேற்று மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

தொழிலாளர்கள் பணிக்கு செல்லாது போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

சாலை மறியல் போராட்டம், ஒப்பாரி போராட்டம், பறை அடித்து முறையிடும் போராட்டம் என பல வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுத்து, தமது எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்தினர்.

தமது கோரிக்கையை அரசு ஏற்காவிட்டால், போராட்டம் தீவிரம் அடையும் என எச்சரிக்கையும் விடுத்தனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் பாரிய ஆர்ப்பாட்டமொன்று ஹற்றன் மணிக்கூட்டு சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியின் நடுவே டயர்களை எரித்து ஹற்றன் கொழும்பு பிரதான வீதியினை மறித்து அரசாங்கத்தை வெளியேறுமாறு கோரி கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஹற்றன் கொழும்பு, ஹற்றன் கண்டி, ஹற்றன் நுவரெலியா பகுதிகளுக்கு செல்லும் பொதுப்போக்குவரத்து தடைப்பட்டன.



அத்துடன் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

மேலும் வட்டவளை கடவளை மற்றும் கரோலினா, இதியகல தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் தற்போது விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடவளைத் தோட்டத்திலிருந்து எதிர்ப்பு பேரணி ஆரம்பித்ததோடு அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். பின்னர் வட்டவளை நகரத்திற்கு வருகை தந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரத்தின் பஸ் தரிப்பிடத்திற்கு முன்னர் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் வாகனங்களையும் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். அதைப்போல் கினிகத்தேனை நகரத்திலும் வாகனங்களை மறித்து தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதேவேளை நுவரெலியா நகரில் கடைகள் அடைக்கப்பட்டு பஸ் போக்குவரத்துகளில் ஈடுபடாது எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டனர்.

இராகலை மேல்பிரிவு, இராகலை மத்தியபிரிவு, சின்னஒப்ராசி,மற்றும் இராகலை இரண்டாம் பிரிவு, ஸ்டாபோட் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் உட்பட இளைஞர்கள் யுவதிகள் இராகலை முச்சக்கரவண்டி சாரதிகள் என சுமார் 300 பேர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தலவாக்கலை நகரில் நேற்று (20) முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.தலவாக்கலை சதொச விற்பனை நிலையத்திற்கு அருகாமையிலிருந்து தலவாக்கலை சுற்றுவட்டம் வரை பேரணியாக வந்து அவ்விடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

நேற்று முன் தினம் ரம்புக்கனை பகுதியில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இவ்வாறு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நபருக்கு மெழுகுவர்த்தி கொளுத்தி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ரம்புக்கனை தாக்குதலுக்கு கடும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

பசறை, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யூரி தோட்ட மக்கள் , பதுளை – பசறை பிரதான வீதியின் ஒரு பகுதியை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஜனநாயக நாட்டில் கருத்துகளை சுதந்திரமாக சொல்வதற்கு உரிமை உண்டு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



ரம்புக்கனையில் மக்களுக்காக குரல் கொடுத்த இளைஞர்களை சுட்டுக்கொன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதோடு, அந்த குடும்பத்திற்கு மலையக மக்கள் சார்பாக ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைக்காகவும், தங்களுடைய கருத்துகளை சுதந்திரமாக சொல்வதற்கும் அனைத்து பிரஜைகளுக்கும் உரிமை உண்டு. பொருளாதார நெருக்கடியில் சர்வதேச சமூகம் எம்மை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் மனித உரிமை மீறல், யுத்த குற்றச்சாட்டுகள் என சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என வற்புறுத்தி வருகின்றது.

# இ.தொ.காங்கிரஸ் வன்முறையை ஒருபோதும் ஆதரிக்காது

**தலவாக்கலை குறுப் நிருபர்**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்முறையை ஒருபோதும் ஆதரித்தது கிடையாது என இ.தொ.காவின் பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மக்களால் ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களின் போது பொலிஸார் வன்முறையை கையில் எடுத்துள்ளமையானது கண்டிக்கத்தக்கது.நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு அரசே பொறுப்பு கூற வேண்டியுள்ளது. ரம்புக்கனையில் பொதுமக்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதை நிறுத்துவதற்காக ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலை தொடர்ந்து பொலிஸாரால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பொறுப்பு கூற வேண்டிய அமைச்சு பதிலளித்தே ஆக வேண்டும் என்பதுடன் நாட்டில் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுமானால் அதை இ.தொ.கா பார்த்துக்கொண்டிருக்காது.

நாட்டில் இன்று உயிர் சேதம் ஏற்படும் அளவிற்கு நாடு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## ரம்புக்கனை சம்பவத்தை இ.தொ.கா வன்மையாக கண்டிகின்றது

### இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம்



ரம்புக்கனை துப்பாக்கி சூட்டு சம்பவம் வன்மையாக கண்டிக்கதக்கது என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எரிபொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து ரம்புக்கனையில் பொதுமக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்காக ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலையடுத்து பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 11 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளின் மீது உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவ ர்களுக்கான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வேண்டிய போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். மக்கள் பொருளாதார ரீதியில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அன்றாட வாழ்க்கையை நடாத்துவதற்கு கஷ்டப்பட்டு வருகின்றனர்.மக்களின் வாழ்வாதாரம் பாரியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது மக்களின் போராட்டம் நியாயமானது. மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இவ்வாறான கொடூர செயல்களில் ஈடுபட்டுள்ளமையானது அவர்கள் மீதான நம்பிக்கையை இழக்க செய்துள்ளது. அரசாங்கம் போராட்டக்காரர்களை அடக்குவதற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பொருளாதார நிலமையை மீளகட்டியெழுப்ப கொடுக்கவில்லை என்பது அவர்களின் தற்போதைய செயல்களில் அறியமுடிகிறது.

நாட்டுமக்களின் பிரச்சினைக்கு தீர்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இ.தொ.கா ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, இச்சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிராத்திப்பதாக தெரிவித்துள்ளார்.


திகதி 19.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4737
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 33,375,428.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 9 3 1 2 8 1

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0046
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,287,300.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 06 09 24 26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,708,342.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 767
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,994,260.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 18 30 32 43
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,821,643.60

கோடி 24 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1085
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,604,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 247,863,790.00
ஆங்கில எழுத்து O சுப்பர் நம்பர் 15 வெற்றி எண்கள் 15 22 30 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



மகாவலி வலயம் சார்ந்த குளங்கள் மற்றும் குடியிருப்பு பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**கேள்வி கோரல்**

**இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான தெஹிஅத்த கண்டிய டோடா பண்ணையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள அரிசி மற்றும் நெல் தயாரிப்பு இயந்திரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்.**

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் சார்பாக இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இல. 500, டி.பி. ஜாயா மாவத்த, கொழும்பு-10, இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபையின் 09ஆம் மாடியில் 2022.05.09 பி.ப. 2.00 வரை தெஹியத்தகண்டிய டோடா பண்ணையில் பாவணையிலிருந்து அகற்றப்பட்ட இயந்திராதிகளை அகற்றுவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. இந்த இயந்திராதிகளை தெஹியத்த கண்டிய டோடா பண்ணையில் 2022.04.21 முதல் 2022.05.08 வரை வார நாட்களில் மு.ப. 9.30 இற்கும் பி.ப. 3.00 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் பரீட்சித்து பார்க்கலாம்.

3. குறித்த கேள்விப் பத்திரங்களை கம்பனி கடிதத் தலைப்பின் மூலம் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து ரூ. 1000.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்தி கொழும்பு 10, டி.பி.ஜாயா மாவத்த, இல. 500 எனுமிடத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 9ஆம் மாடியில் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இல்லையெனில் இலங்கை வங்கி ஹைட்பார்க் கிளையில் உள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் இல. 2327542 எனும் கணக்கிற்கு மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை வைப்புச் செய்து குறித்த நிதி வைப்பு பத்திரத்துடன் குறித்த வேண்டுதல் கடிதத்தை Masltenders@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்தரங்கள் 2022.04.21 முதல் 2022.05.08 வரை வார நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை மட்டுமே விநியோகிக்கப்படும்.

4. அகற்றுவதற்கு உத்தேசித்துள்ள இயந்திராதிகள் பற்றிய விபரங்களை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிப்பதுடன் ஒரு நபருக்கு ஒரு கேள்வி மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

5. முறையாகப் பூர்த்தி செய்த கேள்விப் பத்திரங்களை ரூ. 200,000.00 மீளளிக்கப்படும் காசு வைப்பை அல்லது 03 மாதங்கள் செல்லுபடியாகும் வங்கிப் பிணையொன்றை (Bank Draft) உடன் நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் கேள்வியின் பெயர் எழுதப்பட்ட உறையில் உள்ளிட்டு, பொறியிட்டு 2022 மே 09ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு கொழும்பு-10, டி.பி.ஜாயா மாவத்த, இல. 500 இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 9ஆம் மாடியில் பணிப்பாளர் நாயகம் பணிமனை, பெறுகைப் பிரிவிற்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் திறத்தல் 2022.05.09 பி.ப. 2.00 இற்கு அவ் இடத்திலேயே இடம்பெறுவதுடன் அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு மட்டும் சமுகமளிக்கலாம்.

6. குறித்த நேரத்திற்கு கிடைக்கப்பெறாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல. 0112687235, 011-2687484 இணையதளம்: www.mahaweli.gov.lk

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை மகாவலி அதிகார சபை**
**இல. 500, டி.பி.ஜாயா மாவத்த,**
**கொழும்பு-10.**

# எல்லையோர அத்துமீறல்களை உடனடியாக நிறுத்தவும்

## ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் பரஸ்பரம் குற்றச்சாட்டு



பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதிகளில் இரு தரப்பு பாதுகாப்புப் படையினரும் தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபடுவதாக இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளன.

ஆப்கான் மண்ணை பாக். தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள் என்றும் ஆப்கான் எல்லைப் பாதுகாப்பு படையினர் பாகிஸ்தான் படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள் என்றும் பாகிஸ்தான் ஆப்கானிய அரசின் மீது குற்றச்சாட்டியுள்ளதோடு இஸ்லாமாபாத் ஆப்கான் தூதுவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு தமது கவலையை பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது.

இதே சமயம், காபூலில் உள்ள பாக். தூதுவர் ஆப்கான் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு பாகிஸ்தான் போர் விமானங்கள் ஆப்கானுக்குள் அத்துமீறி பிரவேசித்து கோஸ்ட் மற்றும் குளார் மாகாணங்களில் தாக்குதல்களை நடத்தியிருப்பதற்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. பாக். தூதுவர் மன்சூர் அஹமட் கான், ஆப்கான் வெளிவிவகார அமைச்சுக்கு பதில் வெளிவிவகார அமைச்சர் அமிர்கான் முட்டாக்கி மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் முல்லா ஷெரீன் அக்மட் ஆகியோரினால் அழைக்கப்பட்டார். பின்னர் தமது நாட்டு எல்லைக்குள் நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்தும்படியும் இத்தகைய தாக்குதல்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். உறவுகள் சீர்குலையுமானால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று பாக். தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டதாக காபூல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் ஆப்கான் எல்லைக் காவல் படையினர் பாக். எல்லையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாகவும் கடந்த 14ம் திகதி ஐந்து ஆறு மணித்தியாலங்களுக்கு இத்துப்பாக்கிப் பிரயோகம் நீடித்ததாகவும் தகுந்த பதிலடியை பாகிஸ்தான் படையினர் நடத்தியதாகவும் பாக். தகவல்கள் கூறியுள்ளன.


# பெறுகை அறிவித்தல்

### வர்த்தக, சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சு

**சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிக்காக ஜெனரேட்டர் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கோரல்**

## விலைமனுக்கோரல்

**(திகதியை திருத்துதல்)**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி வங்கிக்கு தேவையான ஜெனரேட்டர்களை கொள்வனவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட 2022.03.18ம் திகதி தினமின, Daily News, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி திருத்தப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

அதனடிப்படையில் விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2022.05.05 மு.ப. 10.30 வரை இடம் பெறுவதுடன் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூ. 55,000 ஐ பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்தி பின்பு குறித்த விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022.05.05 பி.ப. 1.30 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 4ஆம் மாடி, செத்சிறிபாய (கட்டம் 1) பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது, திணைக்களத்தின் நிதிப் பிரிவில் பெறுகை அலகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2022.05.06 பி.ப. 2.00 இற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவையெனில் தொ.பே.இல. 011-2876604 மூலம் பெறுகை முகாமையாளரை விசாரித்து பெற்றுக்கொள்ளலாம்.

2022.03.18 அறிவித்தலின் குறிப்பிடப்படும் ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**வர்த்தக சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சு,**
**1ம் மாடி, செத்சிறிபாய (11ஆம் கட்டம்) பத்தரமுல்ல.**

### பெயர் மாற்றம்

கிழக்கு மாகாணம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளினயடி 3 ஆம் பிரிவின் இக்கம் 104 இல் வசிக்கும் உமறுலெப்பை அப்துல் றசூல் ஆகிய எனது பிறப்பு பதிவு பத்திரத்தில் "அபதுற்தசூல" என பெயர் பதியப்பட்டுள்ளது. எனது ஏனைய சகல ஆவணங்களிலும் அப்துல் றசூல் என பதியப்பட்டுள்ளது எனவே பிறப்பு பதிவு பத்திரத்தில் பதியப்பட்டுள்ள அபதுற்தசூல என்பதை அப்துல் றசூல் என மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

உமறுலெப்பை அப்துல் றசூல்

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/04/003 | 20 pair, 0.5MM, Non Armored, Jelly Filled, Under Ground Telephone Cable – 2000 Meters | 30,000.00 | 1,000.00 | 12-05-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/01/001 | PVC Double Insulated Wires | 20,000.00 | 1,000.00 | 12-05-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

106 கார்கள்

விற்பனைக்கு

WP GL-5015 Peugout 2001 Car, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310,காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 026429

வேலைவாய்ப்பு

325 தொழில்துறை

பொது

நேர்முகத்தேர்வு நடைபெறுகிறது. 1) மேசன் 2) வெல்டர் 0778786076. 445, ஹெவ்லொக் ரோட், கொழும்பு 05 026403

# கேள்வி அறிவித்தல்

## அரச அச்சிடல் கூட்டுத்தாபனம் (SPC)

## கழிவுத் தாள்களை விற்பனை செய்தல்

பின்வரும் அம்சங்களை விற்பனை செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| அம்ச இல. | அம்சம் | கேள்வி குறிப்பீட்டு இலக்கம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | செயற்பாட்டுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01 | Mixed Paper Pieces | SPC/SUP/F1/002/2022/08 | 25,000.00 | 200,000.00 |
| 02. | Printed Forms | | | 200,000.00 |
| 03. | White Paper/White Paper Pieces | | | 100,000.00 |
| 04. | Lottery Paper Pieces | | | 100,000.00 |
| 05. | Board Pieces & Printed Paper Pieces | | | 25,000.00 |
| 06. | Cover Paper (all the papers and boards used to cover the web reels | | | 25,000.00 |
| 07. | Web Tubes | | | 25,000.00 |

2022 ஏப்ரல் 21 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து 2022 மே 12 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பாதுக்க, பணாலுவ, அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், வழங்கல் பிரிவிலிருந்து மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3000 ரூபாவை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், முழுமையான விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் SPC/SUP/F1/002/2022/08 என அடையாளப்படுத்தப்பட்டு 2022 மே 13 ஆம் திகதிக்கு மு.ப. 11 மணிக்கு முன்னராக வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2022 மே 13 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக்களை உடனடியாகவே மூடிய பின்னர், நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலதிக தகவலுக்காக 0112 75 75 01 என்ற இலக்கத்தின் வழியாக வழங்கல் முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரச அச்சிடல் கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ, பாதுக்க.**

SPC

# கேள்விகோரல் அறிவித்தல்

### கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால், முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

### கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் திணைக்களத்திற்கு தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொள்வனவு மற்றும் நிர்மாணப் பணியின் பொருட்டு பொருத்தமான மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**1. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப்பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | மிருக ஆராய்ச்சி அலகின் பொருட்டு இரசாயனங்கள் நுகர்வுகள், கண்ணாடிப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு | 200,000.00 | 6000/- | 2022.04.21 முதல் 2022.05.11 வரை | 2022.05.12 மு.ப.11.00 |

**2. நிர்மாணப் பணிகள்**

| விடய இல | விடயம் | ஆகக் குறைந்தது ICTAD பதிவு | பொறியியலாளரது மதிப்பீடு | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூ) | | விலைமனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலை மனு வழங்கும் காலம் | விலை மனு முடிவுத் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வங்கி உத்தரவாதம் முன் வைப்பதாயின் | காசு செலுத்துவதாயின் | | | |
| 2.1 | தெல்ஹர ஆடு இனவிருத்தி நிலையத்தில் பழைய பணிமனை கட்டிடத்தை பண்ணை முகாமையாளரது உத்தியோகபூர்வ இல்லமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளல் | C8 இற்கு மேல் | 2,805,497.46 | 28,100.00 | 14,050.00 | ரூபா 2500.00 | 2022.04.21 முதல் 2022.05.11 வரை | 2022.05.12 மு.ப.11.00 |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத்திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம்.
03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இணையதளத்தை பார்வையிடவும் (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ.இலக்கம் 13,**
**கெட்டம்பே, பேராதனை**

**தொலைபேசி இல : 081-2388197/081-2385227/ 081-2385701/081-2388120/081-2388189 நீடிப்பு 290/291**

### மேல் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் கழற்றி அகற்றப்பட்ட இயந்திரங்கள் மற்றும் மோட்டார் பாகங்களை விற்பனை செய்தல்

கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் கழற்றி பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மின் உயர்த்தியின் மற்றும் மத்திய வளிச்சீராக்கி அமைப்பின் கீழ்க்காணும் பொருளாதார பெறுமதியுடைய இயந்திரங்கள் மற்றும் மோட்டார் பாகங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**மின் உயர்த்தியின் பாகங்கள்**
**Control 03NOs - Machine 3Nos**

Class: D11 Control:SKA
Load: 750Kg Speed: 750M/min E/L: 5
Maf No & Date 99BE0615EO2 Date 99/9/16

Capa: 11.0kWTM (Gear) TKL
Base Leanth960.0mm
R/E Lenth 7m

**மத்திய வளிச்சீராக்கி அமைப்பின் பாகங்கள்**
**Chillers 2NOs Pumps 4 NOs**

DUNHAM-BUSH
MODEL WCFXK6 T6
Capacity 83 tons
SE EA02100054

HP 40 MODEL EBFCHDB
SE 01304240
SPEC CNS 11445

**HEPA Filters 27 NOsAHU Motors 7NOs**

Size 12x12x6
MODEL Dmic 63
RATED CFM 250
Dop efficiency 99.99%

HP 22
MODEL
SE
SPEC CNS

- பரீட்சித்துப் பார்ப்பதற்காக தொடர்பு கொள்ளுங்கள்

**பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை**
**கம்பஹா.**
**தொ.பே. 033-2222261**

**திங்கள் முதல் வெள்ளி - மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை**

மேற்படி முகவரியில் பெற்றுக் கொள்ளக்கூடிய கேள்விப் படிவத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 500/- வைப்பு அறவிடப்படும்.

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இயந்திரங்கள் மற்றும் மோட்டார் பாகங்களை விற்பனை செய்தல்' என்று குறிப்பிட்டு 2022.05.11ம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புங்கள்.

**பணிப்பாளர்**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**கம்பஹா.**
**தொலைபேசி 033-2222261**

# சீன உதவியுடன் பாகிஸ்தானில் உயிரியல் ஆயுதங்கள் உற்பத்தி

## பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என நிபுணர்கள் எச்சரிக்கை



மனித குலத்தை அழித்தொழிக்கும் வல்லமை கொண்ட நுண்ணுயிர்கள் பாகிஸ்தானில் உருவாக்கப்படுவதாகவும் சீனா இதன் பின்னணியில் இருந்து செயற்படுவதாகவும் உயிரியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வூஹான் வைரஸ் ஆய்வு நிலையமும் பாகிஸ்தான் இராணுவத்தின் ஒரு விரிவான பாதுகாப்பு விஞ்ஞான நிபுணத்துவ பிரிவும் இணைந்து பாகிஸ்தானில் வைரஸ் ஆய்வகமொன்றை நடத்தி வருவதாகவும் இங்கே ஆபத்தான நுண்ணுயிர்களை உருவாக்கும் வல்லமை காணப்படுவதாகவும் பன்நாட்டு உளவுத்துறைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அந்தனி கான் என்ற இந் நிபுணர் தெரிவித்துள்ளார்.

கொவிட்19 வைரஸ் வூஹான் ஆய்வு கூடத்தில் இருந்தே பரவியதாக பரவலாக நம்பப்படும் சூழலில் அந்த ஆய்வகத்தினால் நடத்தப்படும் பாகிஸ்தான் ஆய்வகத்தில் சக்திவாய்ந்த பேரழிவை ஏற்படுத்தும் வைரசுகள் உருவாக்கப்பட முடியும் என இவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

ஆபத்தான நுண்ணுயிர் வலையமைப்பு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச உயிரியல் பாதுகாப்புத்துறை நிபுணரான ரையான் கிளார்க், பாக். உயிரியல் ஆய்வு கூடத்தில் என்ன நடக்கிறது என்பதை கண்காணிக்காமல் விட்டால் அதன் விளைவாக உலகம் பெருமளவு விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். இது உயிரியல் ஆயுத தயாரிப்புத் திட்டமாக இருக்குமானால், இதன் நகர்வுகள் கவனிக்காது விடப்படுமானால் நினைத்தும் பார்க்க முடியாத விளைவுகளை அது ஏற்படுத்தும் எனவும் கிளார்க் தெரிவித்தார்.

---

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

### உள்ளூர் சோளம்/ சோயா வழங்குவதற்காக தற்போது மொத்தமாக உள்ள வழங்குநர்கள் மற்றும் கமத்தொழிலாளர்களை பதிவு செய்து கொள்ளல்

திரிபோஷ உற்பத்திக்குத் தேவையான தரத்துடனான உள்ளூர் சோளம்/ சோயாவை வழங்குவதற்காக தற்போது மொத்தமாக உள்ள வழங்குநர்கள் மற்றும் கமத்தொழிலாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு இலங்கை திரிபோஷ லிமிட்டட் நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூரில் பயிரிடப்பட்ட நன்றாக உயர்த்தப்பட்ட கழிவுகள் அற்ற பழுதடையாத மற்றும் பூஞ்சனம் அற்ற, பூச்சிகளற்ற மிகவும் சுத்தமான சோளம்/ சோயாவாக இருத்தல் வேண்டும்.

மேற்படி தரத்திற்கு சோளம்/ சோயா வழங்குவதற்கு மொத்தமாக சேர்த்து வைத்துள்ளவர்களால் கீழ்க்காணுமாறு விண்ணப்பமொன்றை நிரப்பி, 2022.05.06 பி.ப. 2.30 இற்கு முன் தலைவர், இலங்கை திரிபோஷ லிமிட்டட், த.பெ. 17. கப்புவத்த, ஜாஎல என்ற முகவரிக்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப முடியும் உங்களால் விண்ணபத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்கம் "இலங்கை திரிபோஷ லிமிட்டட் இற்கு சோளம்/ சோயா வழங்குவதற்காக பதிவு செய்தல்" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

நிறுவனம்/ கமத்தொழில் அமைப்பு/ உரிமையாளரின் பெயர்: ..................................................
..................................................
முகவரி :..................................................
..................................................
பதிவு இல அல்லது தேசிய அடையாள அட்டை இல.:..................................................
தொலைபேசி இல.: ..................................................
மின்னஞ்சல் (Email):..................................................
தற்போதுள்ள சோளம் தொகை (நேரடி தொகை) அளவு - (குறைந்தது 20 மெ.தொ. அதாவது 20,000 கி.கி. ஆக இருத்தல்):..................................................
..................................................
தற்போது உள்ள சோயா தொகை (நேரடி தொகை) அளவு (குறைந்தது 20 மெ.தொ. அதாவது 20,000 கி.கி. ஆக இருத்தல் வேண்டும்)
..................................................
வழங்கல்களை ஆரம்பிக்கக்கூடிய திகதி :..................................................
குறித்த தொகையை பரீட்சிக்கக்கூடிய இடம் :..................................................

இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் - 011-2236588/ 0112237418/ 0112228533 ஐ அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்**
**த.பெ. 17, கப்புவத்த,**
**ஜா-எல.**

---

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMSLP/21/ PT/02/52 | Caltex Delo 1000 Marine SAE 40- 16,380 Liters | 85,000 | 1,000.00 | 2022.05.11 ஆம் திகதியன்று மு.ப. 13.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 22 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

---

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/13/053 | Motor Tyres 1000 X 20 16 Ply (Cross Ply) – 100 Nos. | 44,000.00 | 1,000.00 | 12-05-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

---

**ஊவா மாகாண கல்வியமைச்சு**
**ஊவா மாகாண சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## திட்டத்தின் பெயர் - பொது கல்வி நவீனமயப்படுத்தல் திட்டம் (GEM)

**பொதி இல:- GEM/UP/G/2022**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு கல்வி அமைச்சிற்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்கள் மற்றும் Mathematics Activity Pack (ஆரம்ப மற்றம் இரண்டால் நிலை கல்வி) களை வழங்கி விநியோகிப்பதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சார்பாக, பதுளை ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வியமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**(1) தகவல் தொழில்நுட்பம் (IT) சார்ந்த உபகரணங்களை வழங்கி விநியோகித்தல்**

| Item No. | Description No. | Quantity (Units) | Amount of Bid Security (LKR) |
|---|---|---|---|
| 1 | Desktop Computers (i5) | 123 | 240,000.00 |
| 2 | UPS | 123 | 10,000.00 |
| 3 | Laptop Computers (i5) | 49 | 125,000.00 |
| 4 | Monochrome Laser Printers | 79 | 35,000.00 |
| 5 | Digital Photocopy Machine | 59 | 240,000.00 |
| 6 | Multimedia Projectors | 74 | 115,000.00 |
| 7 | Multimedia Projector Screen | 73 | 25,000.00 |
| 8 | Smart Interactive Panel(including all accessories)with Online UPS | 44 | 220,000.00 |

**(2) Mathematics Activity pack வழங்கி விநியோகித்தல் (ஆரம்ப, இரண்டாம் நிலை கல்வி)**

| Item No. | Description | Quantity (Packs) | Amount of Bid Security (LKR) |
|---|---|---|---|
| 1 | Mathematics Activity Pack (24 items) (Primary Education) | 60 | 55,000.00 |
| 2 | Mathematics Activity Pack (12 items) (Secondary Education) | 60 | 65,000.00 |

2. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் ஊடாக நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள், பதுளை, ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வி அமைச்சு, பிரதம கணக்காளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 055-2222814, பெக்ஸ் 0552230962) மற்றும் 2022 ஏப்ரல் 21 முதல் 2022 மே 12 வரை (09.00 மணி முதல் 15.00 மணி வரை) அலுவலக நேரங்களில் சொல்லப்பட்ட அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
4. ஊவா மாகாண கல்வியமைச்சின் பிரதம கணக்காளருக்கு கீழ்க்காணுமாறு ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் வேலை நாட்களில் 2022 ஏப்ரல் 21 முதல் 2022 மே 12ம் திகதி 09.00 மணி முதல் 15.00 மணி வரை மேலே (பந்தி 3) இல் உள்ள முகவரிக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு செலுத்தும் முறை காசாக இருக்கும்.

| No | Description | Non-refundable fee (Rs.) |
|---|---|---|
| 1 | Supply & Delivery of Information Technology (IT) Related Equipment | 5,000.00 |
| 2 | Supply & Delivery of Mathematics Activity Pack (Primary & Secondary Education) | 3,500.00 |

(பந்தி 03) இல் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள ஊவா மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு அறையில் 2022 மே 04ம் திகதி 10.00 மணிக்கு (மு.ப. 10.00) விலைமனுவுக்கு முன்னரான ஓர் கூட்டம் நடைபெறும்.

5. நகல்களுடனான விலைமனுக்கள் மேற்படி (பந்தி 1) இல் முகவரிக்கு பதிவுத் தபாலில் விநியோகிக்கப்படல் வேண்டும். அல்லது 2022.05.13ம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) இற்கு அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடலாம். மூலப் பிரதியின் எல்லாப் பக்கங்களினதும் ஓர் உறுதி செய்யப்பட்ட புகைப்படப் பிரதியாக நகல்கள் இருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022 மே 13ம் திகதி 14.00 மணிக்கு (பி.ப. 2.00) கீழ்க்காணும் முகவரியில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2022 ஜுலை 29 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
7. கிடைக்கப் பெற்றுள்ள விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் மற்றும் பூர்த்தியற்ற சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு கொண்டிருக்கும். அத்துடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வி அமைச்சு**
**ஊவா மாகாண சபை**
**பதுளை.**
**திகதி: 21.04.2022**

# கேள்வி அறிவித்தல் இரத்துச் செய்தல்

சன்டே ஒப்சர்வர் (பக்கம் 28), தினகரன் (பக்கம் 15), சிலுமின (பக்க 30) பத்திரிகைகளில் 2022 ஏப்ரல் 17ஆம் திகதி பிரசுரமான விலைமனு அறிவித்தலில் கீழ்க்காணும் உருப்படிக்கான பெறுகை இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இரத்து செய்தல் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறோம்.

மாகாண கல்வித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

பெக்கேஜ் இல. Gem/EP/G/2022/ELLE/01, Gem/EP/G/2022/EPSI/12, Gem/EP/G/2022/DLM/05

**கிழக்கு மாகாண, மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு IT சார்ந்த உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்கான பெறுகை**

